# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, பங்குனி 26உ (8—4—73) ஞாயிறு ரபி; அவ் 4 — புத்தகம் 26 இதழ் 18


## சூரியரின் 'சொகுசு இஸம்'

அரசாங்க விநியோக ஆணையாளரிடமிருந்து கார்களும், ஜீப்புகளும் வாங்கிக்கொண்ட 86 பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அண்மையில் வெளியிடப்பட்டன. அந்தப் பட்டியலின்படி கார் வாங்கியவர்களில் ஆகக்கூடிய அதிகவிலை கொடுத்து காரை வாங்கியிருப்பவர் தபாலமைச்சர் செல்லையா குமார சூரியர்தான். குமார சூரியரின் காரின் விலை என்ன தெரியுமா? ஐம்பத்தொன்பதினாயிரத்து நானூற்றி மூன்று ரூபா எழுபத்தாறு சதம்! இப்படிப் பட்ட சொகுசுக்காரில் சவாரி செய்தால்தான் இந்நாட்டில் 'சோசலிசம்' வரும் போலும்! வாழ்க குமார சூரியரின் 'சொகுசு இஸம்'!

# செல்வா தலைமையில்

# சட்டமறுப்பு இயக்கம்!

## போதனுமொழியுரிமையை நிலைநாட்ட புத்தூரில் போட்டிப்பாடசாலை ஆரம்பம்!

### பொலிசாருக்கும் சட்ட மீறல்பற்றி அறிவிப்பு!

தமிழ் பிள்ளைகளின் போதனு மொழியுரிமையை நிலைநாட்டும் பொருட்டு காந்திய அடிப்படை சட்ட மறுப்பு இயக்கம் ஒன்றை தமிழர் கூட்டணி இததிங்கள் 6ம் நாள் ஆரம்பித்துள்ளது.

கல்விச் சட்டத்தை மீறி, புத்தூரில் தமிழைப் போதனு மொழியாகக்கொண்ட தமிழ்ப் பாடசாலையொன்றை ஆரம்பித்ததன் மூலம் இந்த இயக்கத்தை தமிழர் கூட்டணி தொடங்கியுள்ளது.

தமிழர் கூட்டணித் தலைவர் தந்தைசெல்வா, தலைமையில் தொடங்கப்பட்டுள்ள இச் சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம், உடுப்பிட்டி முன்னுள் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம், புத்தூரைச் சேர்ந்த திரு. த. ஆனந்தன் ஆகியோர் பங்கு பற்றுகிருர்கள்.

இப்பாடசாலையை தமிழர் கூட்டணி ஆரம்பிப்பது குறித்து, கூட்டணியின் சார்பில் திரு. சி. கதிரவேற்பிள்ளை வடபகுதி பொலிஸ் அதிபருக்கும் அறிவித்துள்ளார்.

1973 சனவரி வரை தமிழ்ப்பாடசாலையாக இயங்கிவந்த புத்தூர் பஞ்சசீக பாடசாலையில், சனவரியிலிருந்து, முதலாம் வகுப்பு முதல் சிங்களம் கட்டாய போதனுமொழியாக்கப் பட்டுள்ளது. இந்தப்பாடசாலையில் படிக்கும் பிள்ளைகள் அனைவரும் தமிழ் குழந்தைகள் என்பதும், அவர்களது சமயம் இந்து மதம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலைகளில் இந்த ஆண்டு முதல் முதலாம் வகுப்புக்கு சேர்க்கப்படும் தமிழ் பிள்ளைகள் சிங்கள மொழி மூலம் படிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது மட்டுமன்றி, சிங்களத்தில் படிக்க இஷ்டமில்லாத, தமிழ் மூலமே படிக்கவிரும்பும் இப்பாடசாலையைச் சுற்றியுள்ள தமிழ் பிள்ளைகளை புத்தூரிலுள்ள வேறு எந்த பாடசாலைகளிலும் சேர்க்கவேண்டாம் என்று கல்வியமைச்சு, கட்டளையிட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது நடைபெறும் இந்தப் பலவந்த சிங்களத்திணிப்பை எதிர்த்தும், அதே நேரத்தில் இதனுல் பாதிக்கப்படும் பிள்ளைகளின் கல்விக்கு வசதி செய்து கொடுக்கவும், புத்தூரில் புதிய தமிழ்ப்பாடசாலையொன்றை தமிழர் கூட்டணி தொடங்கியுள்ளது.

கல்விச்சட்டத்தை மீறி ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்

(7-ம் பக்கம் பார்க்க)

## அடுத்த இதழ் சுதந்திரன் வெளிவராது

தமிழ் - சிங்கள புதுவருடத்தையொட்டி இம்மாதம் 12ம் திகதி முதல் 17ம் திகதிவரை தொடர்ச்சியான விடுமுறை நாட்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், அடுத்த (15-4-73) சுதந்திரன் இதழ் மட்டும் வெளிவராது என்பதை வாசகர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்களுக்கு அறியத்தருகிறேம்; 22-4-73 இதழ் வழமை போல் வெளிவரும்.

—நிர்வாகி,
சுதந்திரன்.

## 'நீதிமன்ற விசேட சட்டத்தை தீயிட்டுப் பொசுக்குவோம்'

### தமிழர் கூட்டணியின் பிரசுரம்!

வடகிழ்மாகாணங்களில் தமிழை நீதிமன்றம் உபயோகித்தல் சிங்கள மந்திரியின் கையில்!

ஏமாற்றுவித்தை தொடருகிறது!!

- சிங்களத்திற்கு அரசியல் சாசனத்தில் உரிமை!
- தமிழிற்குச் சிங்கள நீதி அமைச்சரின் கையில் உரிமை!
- சிங்கள மந்திரி விரும்பினுல் தரலாம் விரும்பாவிட்டால் எடுக்கலாம்!
- அரசியல் சாசனத்தில் தமிழிற்கு உரிமை கிடைக்கும்வரை தொடர்ந்து போராடுவோம்!

''தமிழ்மொழிப் பிரமாணங்களை அமுல் நடத்தமாட்டேன்'' (அஞ்சாட்டு பாராளுமன்ற அறிக்கை தொகுதி 93 நிரல் 1774) என்று கூறிய சிங்கள நீதி மந்திரியின் கையில் தமிழ் உரிமை.

★ தமிழ் கடிதங்களுக்கு அரசாங்கம் தமிழில் பதில் தர மாட்டாது. விரும்பினுல் வழக்குத் தொடரலாம்'' (அஞ்சாட்டு தொகுதி 93 நிரல் 1772, 1773) என்ற சிங்களநீதி மந்திரியின் கையில் தமிழ் உரிமை!

★ தமிழ் மொழிப் பிரமாணங்களை எதிர்த்து வகுப்புவாத ஊர்வலம் வைத்து, அதில் தற்செயலாகச்சுட்டுக் கொல்லப்பட்ட பௌத்த பிக்குவுக்கு நினைவுச்சின்னம் நிறுவிய சிங்கள நீதி மந்திரியின் கையில் தமிழ் உரிமை!

பிற்போக்கு யு. என். பி., சிறிலங்கா, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் எல்லாம் சேர்ந்து தமிழ் மக்களுக்கு அநீதியைச் செய்யும் சிங்களநீதி மந்திரியின் கையில் தமிழ் உரிமையைக் கொடுத்து விட்டார்கள்.

தமிழ் மக்களை ஏமாற்றுவதில் யு. என் பி—ஐக்கிய முன்னணிக் கட்சிகள் இணைகின்றன. தமிழன் போராடும்போது போராட்டவேகத்தைக் குறைக்க தமிழ் உரிமையைச் சிங்கள மந்திரி தருவார். பின்னர் எடுத்துவிடுவார்.

இதற்கு வழிவகுத்த நீதிமன்ற விசேட சட்டத்தை தீயிடுவோம்!

— இவ்வாறு கூறும் துண்டுப்பிரசுரமொன்று தமிழர் கூட்டணியினுல் வெளியிடப்பட்டுள்ளது.

## உதவி அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி எதிர்ப்பு!

அண்மையில் வட இலங்கைக்கு சென்றிருந்த இரு உதவியமைச்சர்களுக்கும் கறுப்புக்கொடி பிடித்து 'திரும்பிப்போ' என்று கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்திஞர்கள் வட்டுக்கோட்டைத் தொகுதிமான இளைஞர்கள்!

சில்லாலை உபதபால் நிலையத்தில் புதிய தொலைபேசிச் சேவையை ஆரம்பித்து வைப்பதற்கெனச் சென்றிருந்த உதவி தபாலமைச்சர் திரு. வி ரி. ஜி. கருணரத்தினவுக்கும் உதவி சமூக சேவைகள் அமைச்சர் திரு. ஜி. எம். சமரசிங்காவுக்கும் எதிராகவே இந்த கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மேற்படி நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இரு உதவி அமைச்சர்களும் வந்துசேர்ந்தபோது, பண்டத்தரிப்பு சந்தியில் வைத்து, ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழர் கூட்டணி இளைஞர் கறுப்புக் கொடி பிடித்து எதிர்ப்பு கோஷம் எழுப்பினர்.

தலைவர்கள் யாருமின்றி இளைஞர்கள் தாமாகவே

(7-ம் பக்கம் பார்க்க)

## கேளுங்கள்! கேளுங்கள்!! புள்ளிகளைக் கேளுங்கள்!!

'பல்கலைக்கழக அனுமதி இந்த ஆண்டு திறமை அடிப்படையிலேதான் நடைபெற்றதாக கல்வியமைச்சு கூறுகிறது. அதாவது மாணவர்களுக்கு புள்ளிகள் (A. B. C. S. F. என்றவாறு) தரம் பிரிக்கப்பட்டுக் கொடுத்த போதும் புள்ளிகளின் கூட்டுத் தொகையைக் கொண்டே பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களுக்கு அழைப்பு விடுத்ததாக கல்வியமைச்சு கூறுகிறது. இது உண்மையானுல் மாணவர்களுக்கு பரீட்சை முடிவுகளைத் தரம்பிரித்து [illegible] நேரடியாக அனுப்புமா கல்வி அமைச்சு? தான் சொல்வதில் நேர்மையும் உண்மையும் இருந்தால் எங்கள் சவாலை கல்வியமைச்சு ஏற்குமா?'

—இவ்வாறு கல்வியமைச்சை நோக்கிச் சவால் விட்டுக் கேட்கிருர்கள் தமிழ் மாணவர்கள். பல்கலைக்கழக அனுமதி சம்பந்தமாக அளவெட்டி மகாசன சபை—கிராம முன்னேற்றச் சங்கம் அண்மையில் நிறைவேற்றியுள்ள ஒரு தீர்மானமும் இதை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது.

'பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை முடிவுகளை, புள்ளிகளைத் தரம் பிரித்த அடிப்படையில் (A. B. C. S. F. என்றவாறு வழங்காது) புள்ளிகளையே நேரடியாக வழங்குமாறு இச்சபை கோருகிறது" எனும் தீர்மானம் மேற்படி சபையில் நிறைவேற்றப்பட்டு தீர்மானத்தின் பிரதிகள் கல்வியமைச்சருக்கும், யாழ் மாவட்ட கல்வியதிகாரிக்கும், உடுவில் பா. உ. வுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதே போன்ற தீர்மானத்தை தமிழ் ஈழத்திலுள்ள கிராமசபைகள், பட்டின சபைகள், நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள், பெற்ருர் ஆசிரிய சங்கங்கள் மற்றும் பொது நல மன்றங்கள் நிறைவேற்றி கல்வியமைச்சருக்கு அனுப்ப வேண்டுமென தமிழ் இளைஞர் பேரவையின் மாணவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபதம்

—திருக்கோணமலைக் கவிராயர்—

ஆட்சியினர் நம்மை
    அடித்து நொறுக்கிடினும்
சூழ்ச்சிகளால் வீழ்த்திச்
    சுக்குநூ றுக்கிடினும்
காய்ச்சிய ஈயத்தைக்
    கண்களிலே ஊற்றிடினும்
மீட்சி பெறும் வரையும்
    மெய் சோரோம், இது சபதம்

நக்குகின்ற நாய்கள்
    நாவை அடக்குமட்டும்
நஞ்சர்கள் வஞ்சகர்கள்
    சாவை அணைக்குமட்டும்
பக்குவமாய் எங்கள்
    பங்கை அடையுமட்டும்
எக்காலமும் குலையோம்,
    எதிர்ப்போம், இது சபதம்

பொறுமைக் கிலக்கணமாய்ப்
    பொறுத்திருந்த காலம்போய்
அடிமைத்தனம் நொறுக்க
    ஆர்த்தெழுந்து போர்தொடுத்து
உரிமை பெறும்வரையில்
    ஓயாது, தூங்காத
துணிவைத் துணை கொள்வோம்
    பணியோம், இது சபதம்

## (வேறு)

எத்தனை கொலைகள் செய்வீர்? எத்தனை தலைகள் கொய்வீர்?
எத்தனை பேரை வாட்டிச் சித்திரவதைகள் செய்வீர்?
அத்தனை பேரும் எங்கள் அழியாத தியாகச் செம்மல்
அத்தனை பேரும் எங்கள் அன்னையின் காவலாளர்
சித்தமாய் வருகின்றோம் நும்சிறையினை நிறைப்போம்,
                                    தந்தை
உத்தரவிடட்டும், பார்! எம் உதயநாள் உதயமாகும்.
பித்தரே! ஆட்சிபீட எத்தரே! பிதற்றல் செய்து
சத்துரு ஆகாதிர், பின் சமத்துவம் கேட்பீர் நீரே!

# நன்றிகெட்ட சித்திரையே!

(செ. குணரத்தினம்)

சித்திரையே நீசும்மா சிரித்து — இன்னும்
சிறையெடுக்க நினைக்காதே இந்த நாட்டில்
எத்தனையோ முறை வந்தாய் என்ன கண்டோம்?- நீயும்
எத்தர்களின் பக்கந்தான் போ 'போ!

கோடியுடுத்துக் கும்பிட்டோம், வாசல்களில்—நாங்கள்
கோலங்கள் திட்டி வரவேற்றோமே!
பாடி மகிழ்ந்தும் பலனொன்றும் காணவில்லை—எம்மை
பாழும் சிறைக்குள்ளே பூட்டிவைத்தாய்!

நன்றிகெட்ட சித்திரையே உனக்கு இங்கே—ஏதும்
நாய்க்கெலும்பு கிடைப்பதுபோல் கிடைக்கும்போடி!
தொன்றுதொட்டு வாழுகின்ற தமிழர் வாழ்வை—நீ
தொடராதே கும்பிட்டு வாழும் பெண் நீ!

நல்லவளாய் நீயிருந்தால் இந்த நாட்டில்—சொறி
நாய்போல கால்நக்கி வாழுவோரை
வல்லவராய், நல்லவராய் மாற்றிடுவாய்—ஈழ
வரலாற்றில் பெரும்புகழை ஈட்டிடுவாய்!

தமிழுணர்ச்சி இல்லாத எருமைகட்கும்—வீண்
தம்பட்டம் அடிக்கின்ற துரோகிகட்கும்
உமியளவும் மண்டைக்குள் ஒன்றுமில்லை—தமிழ்
உணர்ச்சியினை இவர்க்கெல்லாம் அளித்தாலென்ன?

உன்வரவால் இந்நாட்டில் நன்மையேதும்—எமக்கு
உண்டென்றால் வாடியம்மா வரவேற்கிறோம்!
மண்ணளவும் நன்மையில்லை என்று கண்டால்—இந்த
மண்மீது கால்வைக்கவேண்டாம் போடி!

# எழுகவே! எழுகவே!! எழுகவே!!

— சரவணையூர் வே. இராசலிங்கம்

எழுகவே! எழுகவே!! எழுகவே!!!
எழுககே! எழுகவே!! எழுகவே!!!

ஈழத் தமிழர் ஒன்று கூடி
    ஏற்றி வைத்தோம் என்று பாடி
மேளம் தட்டி ஆடுவோம் நாம் தோழரே—எம்
    மீட்சிக் கொடி அழைக்குதடா எழுகவே!

போட்டி பூசல் வஞ்சனைகள்
    வித்த லாட்டம் தொலைக என்று
ஆட்டி யசைந் தழைக்குதடா பாரடா—எம்
    ஆண்மைக் கொடிக் கடினை எது கூறடா!

"உதய சூரியன் நான்
    உதித்தனனே தமிழர் உய்ய
எனதயும் தாங்கும் இதயம் வேண்டும் தோழனே"-என
    எழுச்சியுரை இயம்பும் கொடி வாழ்கவே!

மன்றம் வைத்து ஆண்ட சாதி
    மடிவ தெனில் என்ன நீதி
இன்றில் ஒன்று காண வேண்டும் என்குதே—எம்
    எழுச்சிக் கொடி வாழ்த்திடுவோம் எழுகவே!



இ. வசந்தா
சங்குவேலிதெற்கு
மானிப்பாய்

கே: தன்னிகரில்லா தனிப் பெருந்தலைவி திருமதி. மங்கையர்கரசி அமிர்தலிங்கத்தை போட்டி இன்றி தெரிவு செய்து தேசிய அரசுப்பேரவைக்கு அனுப்பினால், திரு. செல்லையா குமாரசூரியர் என்ன நினைப்பார்?

ப: காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கும் வேலை இனியும் சரிப்படாது என்று அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு ஓடிவிட எண்ணுவார்!

ஃ

சி. றெஜினேல்ட்
சென். மேரிஸ் ரோட்
விடத்தல் தீவு.

கே: நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

ப: அதிகாரத்துக்காகவும் பதவிக்காகவும் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிடும் ஒரு சாதாரண அரசியல்வாதி!

ஃ

க. ஜெயானந்தன்
மாதகல்

கே உண்மையான அன்பை எப்பொழுது அறியலாம்?

ப: ஒருவன் துன்பப்படும் போது!

கே: நம்தமிழ்ஈழநாட்டை பொன்கொழிக்கும் நாடாக்கவேண்டுமாயின் முதலில் என்ன செய்யவேண்டும்?

ப: தமிழ் ஈழத்துக்கு அரசியல் சுதந்திரம் வேண்டும்!

கே: எட்டப்பன், வி. பி. யைப்பற்றி ஒரு சில வரிகள்...?

ப: அதுதான் நீங்களே கூறிவிட்டீர்களே 'எட்டப்பன்' என்று!

ஃ

ஜீவரட்சகன்
அளவெட்டி

கே: பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கு தமிழ் மாணவன் ஏன்கூடப் புள்ளி எடுக்க வேண்டும்? சிங்கள மாணவருக்கு மட்டும் ஏன் குறைந்த புள்ளி?

ப: காரணம் சிங்கள இனம் ஆளும் இனம்—தமிழினம் ஆளப்படும் அடிமை இனம்!!

ஃ

இ. பத்மநாதன்
அளவெட்டி

கே: குடியரசு அரசியல் சட்டத்துக்கு கையொப்பமிட்டோர் ஏன் அங்கொடைக்கு அனுப்பப்படவில்லை?

ப: தமிழினம் சுதந்திரம் பெற்ற பின்னர், இவர்களை எங்கு அனுப்புவதென்பதை தமிழ் மக்கள் தீர்மானிப்பார்கள்!

ஃ

சி. சிவனேசன்,
பூமாஞ்சோலை

கே: எம். ஜி. ஆர் தற்போது அரசியலிலா நடிப்பிலா ஈடுபடுகிறார்?

ப: இரண்டிலும்!

ஃ

பிரமராயன்
மட்டக்களப்பு

கே: தமிழினத்துரோகி [illegible] செல்வநாயகத்தின் எதிர்காலம் என்ன?

ப: செல்லா நாணயம்!!

பா. வனஜா
பிரதான வீதி
கல்லடி

கே: மட்டுநகரில் தமிழர் கூட்டணி அதிகம் இயங்காததன் காரணம் என்ன?

ப: காரணம், மட்டுநகர் இளைஞர்களின் சோர்வு என்று கூறமாட்டேன். அவர்கள் கொள்கையில் ஊறிய தங்கங்கள்! மட்டுநகரில் தமிழர் கூட்டணியை வழி நடத்தப்பொறுப்பேற்றுள்ள தலைவர்களின் அக்கறையின்மைதான் காரணம்!

ஃ

அ. அப்துல் லத்தீப்
திருக்கோணமலை

கே: தமிழர் கூட்டணியின் கோரிக்கைகள் எந்த அளவுக்கு வெற்றியளித்துள்ளது?

ப: வாருங்கள் பேசித் தீர்ப்போம்— என்று தமிழர் கூட்டணியினருக்கு நிதியமைச்சர் பகிரங்கமாகவே அழைப்பு விடும் அளவுக்கு!!

கே: எம். ஜி. ஆர்—கருணாநிதி இவர்களின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப: இதுபற்றி தமிழ் நாட்டின் அடுத்தபொதுத்தேர்தல்தான் தெளிவான தீர்ப்பை வழங்க முடியும்!

ஃ

க. ஜெயானந்தன்
மாதகல்

கே: காவடிக்கு அரசியல் அனுபவம் உண்டா?

ப: எச்சில் இலை நக்குவதில் அனுபவம் உண்டு!

கே: பத்திரிகை மசோதாவை ஆதரித்த யாழ். பா. உ. மாட்டினைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: தமிழினத்துக்கு செய்து வரும் துரோகங்களை மறைப்பதற்கு அதுவே தக்க கேடயம் என்று அவர் கருதியிருக்கலாம்!

ஃ

க. இளையதம்பி,
கணேசபுரம், கிளிநொச்சி.

கே: வடமாகாணத்திற்கு சில மந்திரிகள் அடிக்கடி வந்து போகிறார்களே சில சமயம் பிரதமர் ஸ்ரீமாவும் வந்து போகக் கூடுமா? அப்படி அவர்கள் வந்து போகும் நோக்கம் என்ன?

ப: நீயும் நானும் ஒன்று என்று கூறி தமிழினத்தின் வாயில் மண்போடுவது!

ஃ

ஜெ. சிவமயம்,
காலி.

கே: கோப்பாய் எம். பி. எஸ். கதிரவேற்பிள்ளை, உடுவில் எம். பி. வி. தர்மலிங்கம், உடுப்பிட்டி எம். பி. க. ஜெயக்கொடி ஆகியோரின் முகவரி என்ன?

ப: இவர்களது பெயருடன் ஊரையும் போட்டால் கடிதம் போய்ச் சேர்ந்துவிடும்.

கே: சுதந்திரனைத் தவறாது வருடம் முழுதும் தபாலுடன் எடுக்க வருட சந்தா எவ்வளவு?

ப: ஆக ரூபா பதினெட்டுத்தான்!

ஃ

கோ. விஜி,
யாழ்ப்பாணம்.

கே: தமிழர் விடுதலை இயக்கம் தங்கள் உரிமையைப் பெற்றுவிடும்போது தமிழ் துரோகிகளின் நிலை என்னவாகும்?

ப: தங்கள் சிங்கள எசமானர்களின் நாட்டிலேயே அடிமைகளாக குற்றேவல் செய்து வயிறுகழுவ வேண்டி நேரிடும்!

ஃ

ஏ. கே. ரஸாக்,
கொழும்பு-14.

கே: யார் யாருக்கு சொந்தம்?

ப: ஆறடிகுழிக்கு மனிதன் சொந்தம்!

ஃ

செல்வி சாந்தி துரைராஜ்,
கீரிமலை ரோட்,
பண்டத்தரிப்பு.

கே: மைரயிட்ஸ்கேட், மினிஸ் கேட், லுங்கி அணியும் தமிழ்ப் பெண்ணின் வாழ்க்கையைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: 'காட்டிக் காட்டி மறைத்துக்கொள்ளும்' சுயநலமில்லாத வாழ்க்கை!

ஃ

கி. கேசவன்,
கிரான்குளம்-7,
மட்டக்களப்பு.

கே: சில வாரங்களுக்கு முன் வெளிவந்த 'தினகரன்' பத்திரிகைச் செய்தியில் கிழக்கு மாகாண தமிழர் கூட்டணி எம். பிகள் சிலர் புதிய கட்சி என்று ஒன்று தொடங்கபோகிறார்கள் என வெளி வந்துள்ளது. அது உண்மையா?

ப: கீழ்த்தரமான பொய்ச் செய்தி அது. தமிழினத்தை கிழக்கு, வடக்கென்று பிரித்துவிட ஏரிக்கரை ஏடு நடத்திவரும் பொய்ப் பிரசாரங்களில் அதுவும் ஒன்று!

ஃ

கே. யோகன்,
வண்ணையூர்.

கே: போயா தினகரன் முதற் பக்கத்தில் ஒரு பெரிய விளம்பரம் போட விரும்புகின்றேன் இடம் தருவார்களா?

ப: குமாரசூரியரைப் புகழ்ந்து பாராட்டி ஓர் அறிக்கை அனுப்புங்கள்! உங்கள் ஆசை நிறைவேறும்!

கே: குமாரசூரியர் என்ஞெருவா தமிழினத்தில் தோன்றியிருக்கா விட்டால்?

ப: தமிழினத்தில் ஓர் எட்டப்பன் குறைந்திருப்பான்!

ஃ

எம். கே. ஜே. பிரேமலோசன்
திருநெல்வேலி.

கே: கொள்கைப் பிடிப்புள்ளவன் எப்படியும் தனது லட்சியத்தை அடைந்து விடுவது என்று அவசரப்படும் போது எவ்வழியை பின்பற்றுவான்?

ப: நிச்சயம், அறவழியை கைவிடமாட்டான்!

ஃ

ச. புவனேஸ்வரி,
லோவர் வீதி, பதுளை.

கே: எனது காதில் அடிபடுபடியாக பலர் சிங்களம் படித்தால்தான் அரசாங்கத்தில உயர் பதவிகள் கிடைக்கும் என்கின்றனர் இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: சிங்களம் படித்தும் உத்தியோகம் கிடைக்காத எத்தனையோ தமிழ் இளைஞர்களை நான் அறிவேன்—இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

கே: காங்கேசன் துறை இடை தேர்தல் நடைபெறுமல் இருப்பதன் மர்மம் என்ன?

ப: தேர்தலை நடத்த வேண்டிய அதிகாரம் சிங்கள மக்களிடம் இருப்பதுதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ முதல்வரின் பிறந்த நாள்!

## தமிழகமெங்கும் விசேட பூசை, பிரார்த்தனை!

ஈழத்தமிழ் நாட்டின் முதல்வர் — தமிழ்தேசிய இனத்தின் தந்தை — முதுபெரும் அரசியல் ஞானி— பெரியவர் செல்வா அவர்களுடைய 75வது பிறந்த நாள் விழா ஈழத் தமிழ் நாடு முழுவதும் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது. இந்துக் கோவில்களிலும், கிறிஸ்தவ தேவாலயங்களிலும் விசேட பூசைகளும் பிரார்த்தனைகளும் நடத்தப்பட்டன.

தமிழர் கூட்டணித்தலைவர்களும், தமிழ் பிரமுகர்களும், அறிஞர்களும் ஏராளமான பொது மக்களும் தந்தையின் இல்லத்துக்கு நேரில் சென்று தந்தைக்கு மலர்மாலை சூட்டி தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

தமது சொந்த ஊரான தெல்லிப்பளையிலுள்ள தமது இல்லத்தில் தமது பிறந்த நாளை அமைதியுடன் பெரியவர் கழித்தார்.

31-3-1973 தந்தை செல்வா அவர்களின் 75வது பிறந்த தினமாகும். தந்தையின் பிறந்த நாள் விழாவை பிரமாண்டமான முறையில் கொண்டாடுவதற்கு மாவை சேனாதிராசா தலைமையில் தமிழ் இளைஞர்கள் பலர் ஏற்பாடு செய்து வந்தனர். அவ்விளைஞர்களில் பலர் திடீரென அரசாங்கத்தினால் கைதுசெய்யப்பட்டு சிறையிடப்பட்டதால் தந்தையின் பிறந்த நாள் விழா மிக அமைதியான முறையில் தமிழ் ஈழமெங்கும் கொண்டாடப்பட்டது.

தமிழ் இளைஞர்கள் காரணமின்றி சிறையிடப்பட்டுக் கொடுமைப்படுத்தப்படும் போது தமக்கு பெரிய அளவில் பிறந்தநாள் விழா எதுவும் எடுக்கப்படுவதை தமிழர் தந்தை செல்வா அறவே விரும்பவில்லையென்றும் அறியப்படுகிறது.

தமது 75வது பிறந்த நாளை பெரியவர் தமது சொந்த ஊராகிய தெல்லிப்பளையிலுள்ள அவரது இல்லத்தில் அமைதியுடன் கழித்தார். தெளிந்த முகத்துடனும், உற்சாகத்துடனும் தந்தை காணப்பட்டார். தமிழர் கூட்டணியின் தலைவர்களும், பிரமுகர்களும், தமிழ் அறிஞர்களும், ஏராளமான பொதுமக்களும் தந்தையின் இல்லத்துக்கு நேரில் வந்து மலர் மாலை சூட்டி தங்கள் மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டனர்.


அவர்களிடம், என்னுடலில் உயிர் இருக்கும் வரை தமிழினத்தின் விடுதலைக்காக உழைப்பேன்' என்று உறுதியுடன் தெரிவித்தார் செல்வா.

### விசேட பூசை

தெல்லிப்பழை திருச்சபை ஆலயத்தில் தந்தை செல்வாவின் பெயரால் அவரது பிறந்த நாளன்று விசேட பூசை நடாத்தப்பட்டது. இதில் தந்தை செல்வாவும் கலந்துகொண்டார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் அன்று மாலை விசேட அபிசேகமும் பூசையும் நடைபெற்றன. தமிழர் கூட்டணியினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த விசேட பூசையை, கந்தசுவாமி கோவில் ஆதீன கர்த்தா உயர் திரு. துரைச்சாமிக் குருக்களும், கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தைச் சேர்ந்த உயர் திரு. வைத்திய நாதக் குருக்களும் நடத்தினர்.

தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் திருமதி.



அமிர்தலிங்கம், வழக்கறிஞர் சு. நடராசா, வழக்கறிஞர் குமரகுரு உட்பட ஏராளமானோர் இந்த விசேட பூசையில் கலந்துகொண்டனர்.

கந்தரோடை வட்டாக்கை அம்மன் கோவிலில் உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் முன்னின்று உபயத்தை நடத்த, தந்தையின் பெயரால் விசேட பூசையும், அன்னதானமும் நடைபெற்றது. இதே போல், காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள பல்வேறு கிராமங்களிலும் ஆங்காங்குள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் மக்கள் விசேட பிரார்த்தனைகளை நடத்தினர்.

தொகுதியிலுள்ள வீதிகள் தோறும் மகரதோரணங்களும் உதய சூரியன் கொடிகளும் காணப்பட்டன.

### மட்டுநகரில்...!

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தந்தையின் பிறந்த நாளன்று விசேட பூசையும் பிரார்த்தனையும நடைபெற்றது. இப்பூசையில், மட்டக்களப்பு மாவட்ட தமிழர் கூட்டணித்தலைவர்களும், ஏராளமான பொது மக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பூசையின் முடிவில் அன்னதானம் இடம் பெற்றது.

### மன்னாரில்...

தந்தையின் பிறந்த நாளையொட்டி மன்னாரில் விசேட பாடற் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. மன்னார் சென்ட் மேரீஸ் தேவாலயத்தில் பூசைப்பலியை மன்னார் பங்குக்குரவர் வண பிதா கில்லரி ஜெயகணேசன் ஒப்புக்கொடுத்தார்.

திரு. செல்வநாயகம், நீண்டகாலம் வாழ்ந்து தமிழ்பேசும் இனத்துக்கு தொண்டு செய்யவும் இலட்சியங்களை அடையவும் பிரார்த்திக்கப்பட்டது. மன்னார் தமிழர் கூட்டணி ஆதரவாளர்கள் இந்தப் பூசையை ஒழுங்கு செய்திருந்தனர்.

### ஏறாவூரில்...

ஏறாவூர் 4ம் குறிச்சி ஸ்ரீ கணேசர் ஆலயத்தில் தந்தை செல்வாவின் பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தந்தையின் நலனுக்காக மேற்படி ஆலயத்தில் விசேட பூசையும் பிரார்த்தனையும் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகளில் கல்குடா பா. உ. திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், திருமதி தேவநாயகம், கல்குடா முன்னாள் பா. உ. பொ. மாணிக்கவாசகர், ஏறாவூர் தெற்கு கி. ச. தலைவர் திரு. எஸ். ஆலாலசுந்தரம், முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் உட்பட தமிழர் கூட்டணிப் பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### தேவநாயகம் பேச்சு

இவ்விழாவில் கல்குடா பா. உ. திரு. தேவநாயகம் பேசும்போது கூறியதாவது:-

"75 ஆண்டுகளுக்குமுன், திரு. செல்வநாயகம் பிறந்திருக்காவிட்டால், சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்தால் நசுக்கப்பட்டிருக்கும். குடியரசுச் சட்டம் சிறுபான்மை இனத்தை நசுக்குவதற்காக கொண்டுவரப்பட்ட நேரத்தில் தமிழர் தலைவர்களை ஒன்று திரட்டி கூட்டணி கண்டார் பெரியவர். அவர் காலத்திலேயே தமிழினம் விடுதலை பெறுவது உறுதி-"

இதன்பின்னர் ஏழைகளுக்கு திருமதி தேவநாயகம் அன்னதானம் வழங்கினார்.

### நீர் கொழும்பில்......

நீர் கொழும்பு சிறீ சித்தி விநாயகர் ஆலயத்தில் செல்வாவின் பிறந்த நாள் விழா சிறந்தமுறையில் கொண்டாடப்பட்டது. விசேட பூசையும் பிரார்த்தனையும் நடத்தப்பட்டது. தமிழரசுக்கட்சியின் நீர்கொழும்புக் கிளை இதை முன்னின்று நடத்தியது.

# ஒவ்வொருவராகச் சிறைக்குள் பூட்டினாலும் ஓயாமல் தொடரும் தமிழர்படை!

## அடக்குமுறைக்குத் தமிழினம் பணியாது!

### அரசியல் சட்டத்தைத் திருத்தி உரிமைகளை வழங்கு!

மழை காலத்தில் புறப்படும் புற்றீசற் கூட்டம் போல் மந்திரி(ரி)மார் ஈழத் தமிழகத்திற்குப் படையெடுத்துவருகிறார்கள். அவர்களை வரவழைத்து மாலை மரியாதைகள் செய்வதற்குத் மறத் தமிழர் கூட்டம் தயாராக இல்லை என்பதை அன்மைக் காலங்களில் அங்கு விஜயம் செய்த அமைச்சர்களும், அவர்களை அண்டி வாழும் தொண்டரடிப் பொடியாழ்வார்களும் தெளிவாக உணர்ந்துவிட்டார்கள். எழுச்சிபெற்ற தமிழினத்தை இனி எவராலும் ஏமாற்ற முடியாது, என்பதை எத்தர்களுக்கு எடுத்துக் காட்டிவிட்டது ஈழத் தமிழினம்! சிங்கள ஏகாதிபத்தியத்தால் வரையப்பட்ட சிங்கள அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தித் தமிழினத்துக்கும் உரிமையளிக்கும் உயர்ந்த அரசியற் சட்டத்தை உருவாக்கும்வரை உணர்ச்சிபெற்ற தமிழன் ஓய்ந்துவிடமாட்டான்!

### நீறுபூத்த நெருப்பு

தமிழனின் நாடித்துடிப்பு அடங்கிவிட்டதா என்று தொட்டுப் பார்க்கும் தோரணையில் அமைச்சர்கள் படையெடுத்து வருகிறார்கள். ஆனால் நீறுபூத்த நெருப்பாக இருக்கும் தமிழன் நிலையைத் தப்புக் கணக்குப் போட்டுவிட்டோமே என்று இப்பொழுதுதான் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். குமுறும் எரிமலை கொந்தளித்து வெடிக்கும்போது அதன் கோரத் தண்மையை எவராலுமே தாங்கிக்கொள்ள முடியாதென்பதைக் கோடரிக் காம்புகள் நன்றாக உணர வேண்டும்.

### இலங்கையில் ஒரு இடிஅமீன்

தெற்கிலிருந்துகொண்டு கூப்பாடு போடுக்கும், சின்னஞ் சாமிக்கும் காணி கொடுக்க மாட்டோம் என்று பேசும் சிங்களச் சோசலிசவாதிகள், வண்டமிழர் பூமியாய் [illegible] கிழக்கு, வந்ததும் [illegible] கிறோம் தமிழை என்று வாய் கிழியக்கத்துகிறார்கள். கறுப்புக்கொடி காட்டுவது தொடருமானால் கன்னித் தமிழ் ஈழத்துக்குத் தேவையான உதவிகளைத் தடை செய்துவிடுவோம் என்று ஆணவமாகப் பேசுகிறார் இன்னுமோர் இடி அமீன். அந்த ஆணவப் பேச்சாளருக்கு அன்பான வேண்டு

**'காங்கையூரான்'**

கோள்! எங்கள் தமிழர்கள் விடுதலைப் பாதையில் காலடி எடுத்துவைத்து விட்டார்கள். இனிமேல் உங்கள் உதவிகள் எமக்குத் தேவைப்படாது! நாங்களாக உங்கள் உதவியை உதறித்தள்ள முன், நீங்களாக அவற்றை நிறுத்திவிட்டு உங்களுக்கும் எங்களுக்கும் இனிமேல் எந்த உறவும் கிடையாது என்பதைக் கூறிவிடுங்கள்! அப்படிக் கூறிவிடுவீர்களென்றால் நாங்கள் உங்களுக்கு நன்றி [illegible] அன்பான அழைப்பதோ அதி விரைவில் ஆணையிடுங்கள்!

### வெற்றி பெறுவோம்

எங்களியக்கம் அண்ணல் காந்தியின் அறவழி இயக்கம் என்பதால் கேலியியக்கமாக எண்ணி ஏமாந்துவிடாதீர்கள்! எந்த நாட்டின் விடுதலை இயக்கமும் வெற்றி பெறாமல் விட்டதில்லை. அரை நிர்வாணப் பக்கிரி என்று அண்ணல் காந்தியைக் கேலி செய்த ஆங்கில ஏகாதிபத்தியம் கூட இறுதியில் அவருடைய புனிதமான கொள்கைகளுக்கு அடிபணிந்ததென்றால் அது ஒன்றே போதும் அகிம்சையின் வெற்றிக்கு! எனவே அறவழியில் வீறு நடை போடும் எமது விடுதலை இயக்கமும் வெற்றி பெறும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

### தமிழன் தூங்கமாட்டான்

வடக்கென்றும், கிழக்கென்றும், மலைநாட்டுத் தமிழனென்றும் கூறுபோட்டுத் தமிழினத்தின் ஒற்றுமையை முறியடிக்க முயற்சிக்கும் மூண்டங்களின் முகத்திற் கரி பூசப்பட்டு விட்டது! இனி மேல் ஒன்றுபட்ட தமிழினத்தை உடைத்துவிட எந்தச் சக்தியாலும் முடியாது! தமிழன் விழித்து விட்டான்! தமிழன் தூங்குகிறான் என்று பார்க்க அமைச்சர்களை அனுப்பவேண்டாம்! அவன் தூங்கமாட்டான் விடுதலை கிடைக்கும்வரை தூங்கமாட்டான்!

### உயிரையும் தருவோம்

வடக்கே வந்த சூரியரை வந்த வழியே கண்ணை மூடிக் கொண்டு ஓடவைத்தது கறுப்புக்கொடி! கிழக்கிலும் அந்தப் புனித இயக்கத்தைத் தொடக்கி வைக்க அவரே போனார். அந்தோ! பரிதாபம் அங்கேயும் கறுப்புக்கொடி! வடக்கு, கிழக்கு, மலைநாடு என்று எவ்வித பேதமும் கிடையாது. இனிமேல் தீவிரமடையும் கறுப்புக்கொடி இயக்கம் விடுதலை ஒளியை விரைவில் வீசட்டும்! போராட்டம் படிப்படியாக விரிவாக்கப்படும் அதே வேளையில் ஈழத் தமிழினத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் திட்டங்கள் தயாராகட்டும்! இனிமேல் எங்களுக்கு எவருடைய உதவியும் வேண்டாம்! அடிமைபாகப் பலகாலம் வாழ்வதைவிட உரிமையுடன் சில நாட்கள் வாழ்ந்தாலும் போதும். எங்கள் நாட்டில் கஞ்சியைக் குடித்தாலும் உரிமையுடன் வாழ்வோம்! மாற்றானுக்கு மண்டியிட்டு வாழாமல் சுதந்திர இனமாக மாண்டு மடிவோம். எங்கள் மண்ணுக்காக எம்முயிரைப் பணயம்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# சட்ட மறுப்பும் அதற்கான காரணங்களும்!

தமிழ் மக்களின் மிகவும் முக்கியமான அடிப்படை உரிமையான போதனு மொழி உரிமையை நிலை நாட்டும் பொருட்டு அஹிம்சாரீதியான சட்ட மறுப்பு இயக்கத்தில் இறங்குவதென்று தமிழர் கூட்டணி முடிவு செய்து, அதைச் செயல் படுத்தவும் முனைந்துள்ளது.

தாய்மொழியே ஒரு பிள்ளையின் கல்விமொழியாக இருக்கவேண்டுமென்ற உலக கல்வி நிபுணர்களின் கருத்துக்களையும் ஐ நா. மனித உரிமை சாசனத்தையும் உதறித் தள்ளி விட்டு, தமிழ்க் குழந்தைகளின் தொண்டைக்குள் சிங்களத்தை போதனு மொழியாகவும் பௌத்தத்தை கட்டாய பாடமாகவும் திணிக்கும் முயற்சியில் கல்வியமைச்சு பிடிவாதத்துடன் ஈடுபட்டுள்ளது.

தமிழ்ப் பாடசாலையாகவே இயங்கிவந்த தமிழ்குழந்தைகளே படித்துவரும் புத்தூர் பாடசாலையில் இந்த ஆண்டு முதல் முதலாவது வகுப்பில் சிங்களத்தை பாடமொழியாக்கியது மட்டுமன்றி, சிங்களத்தை பாடமொழியாக ஏற்க மறுக்கும் அந்தப்பாடசாலையின் சுற்றுப் புறமுள்ள பிள்ளைகளுக்கு புத்தூரிலுள்ள ஏனைய பாடசாலைகளில் இடம் கொடுக்கக்கூடாதென்றும் கல்வியமைச்சு தடை விதித்துள்ளது.

இது திட்டமிட்ட மிகப்பெரும் கொடுமையாகும்—மிகப்பெரும் அநீதியாகும். தமிழினத்தை சிங்கள பௌத்தர்களாக்கும் இனமாற்ற நடவடிக்கையாகும். இந்த 'அநியாயத்தை எதிர்த்தும், பாதிக்கப்பட்ட தமிழ் பிள்ளைகள் தாய்மொழி மூலம் கல்வி கற்பதற்கு வசதிசெய்து கொடுக்கும் நோக்குடனும் புத்தூரில் தனியொரு தமிழ்ப்பாடசாலையை தொடங்கி நடத்தி அதன் விளைவுகளை ஏற்கத் தயாராகி விட்டது தமிழர் கூட்டணி.

அநியாயமான சட்டங்களுக்கும் அநீதிகளுக்கும் ஒத்துழைப்புத் தர மறுப்பதுதான் ஓர் உண்மையான சத்தியாக்கிரகியின் கடமையாகும். அந்த வகையில் தமிழ் குழந்தைகளின் போதனு மொழியாக சிங்களத்தை புகுத்தும் அக்கிரமத்தை எதிர்த்தும், கல்விச் சட்டத்தை மீறியும் காந்திய வழியில் புத்தூரில் தமிழைப் போதனு மொழியாகக்கொண்ட ஒரு பாடசாலையை நிறுவி நடத்த தமிழர் கூட்டணியினர் தீர்மானித்தது முற்றிலும் நியாயமானதே.

தமிழர்களின் அடிப்படை உரிமைகளில் கைவைத்தால், இப்படியே ஒவ்வொன்றாகத் தங்கள் அலுவல்களைத் தாங்களே நிர்வகித்துக்கொண்டு தனியே பிரிந்து போவதைத் தவிர தமிழினத்துக்கு வேறு வழியில்லையென்பதே தமிழர் கூட்டணியினர் புத்தூரில் சட்டத்தை மீறி புதிய பாடசாலை ஆரம்பித்துள்ளதன் தாற்பரியமாகும்.

புத்தூர் பாடசாலை குறித்தும் தமிழர் கூட்டணியின் சட்டமறுப்பு இயக்கம் பற்றியும் கூட்டணி சார்பில் திரு. சி. கதிரவேற்பிள்ளை சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள ஓர் அறிக்கையில் முந்திய அரசாங்க காலத்தில் நிறுவப்பட்ட பிரச்சினைக் குரிய நான்கு பாடசாலைகள் பற்றிய பல உண்மைகளை அம்பலப்படுத்தியிருக்கிறார். திரு. கதிரவேற்பிள்ளை தமது அறிக்கையில் கூறுவதாவது:-

1. இப்பாடசாலைகள் 1961க்குப்பின் சட்ட விரோதமாக நிறுவப்பட்டவையாயினும் இவற்றை நிறுவிய முகாமையாளருக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

2. இப்பாடசாலைகள் தமிழ் போதனு மொழிப் பாடசாலைகளாக நிறுவப்பட்டு மார்கழி 1972 வரை தமிழ் தலைமை ஆசிரியர், தமிழ் ஆசிரியரைக்கொண்டு இயங்கின. ஆனல் இந்து பிள்ளைகளுக்கு பௌத்தம் போதிக்கப்பட்டது.

3. இக்காலத்தில் (66—72 வரையில்) சிங்களத்தை போதனுமொழியாக்கும் பெற்றோரின் உண்மையான விண்ணப்பம் ஏதும் இல்லை, தமிழ் போதனு மொழியை அவர்கள் ஆட்சேபிக்கவுமில்லை. தங்களை இந்துக்களென்றும் தமிழ் போதனு மொழியாக வேண்டும் என்றும பிரகடனப்படுத்த முடியாமல் அச்சிடப்பட்ட படிவங்களில் திரு. குலத்துங்கா வைகாசி 69ல் பெற்றோரிடம் எடுத்த விண்ணப்பங்கள் மட்டுமே இருந்தன.

4. பாடசாலைகள் கை ஏற்கப்படும் என்றும் ஆசிரியருக்கு நியமனம் கிடைக்கும் என்ற வாக்குறுதியின் பேரிலும் இக் கையெழுத்துகள் எடுக்கப்பட்டன.

5. பெற்றோரிடமிருந்து இப்படி உண்மையற்றதும் நிர்ப்பந்தப்படுத்தி எடுக்கப்பட்டதுமான பிரகடனங்களும் அவை பற்றிய ஆதாரமற்ற அறிக்கைகளும் ஆதியில் இருந்த உச்ச நிலையில் ஆட்சேபிக்கப்பட்டு ஏற்கப்படாமல் கைவிடப்பட்டன.

6. தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறிய பின்பே, வைகாசி 69ல் இப்பாடசாலைகள் போதனு மொழி மாற்றம் செய்து சிங்கள கனிஷ்ட வித்தியாலயங்களாக கையேற்கும் முயற்சி கைவிடப்பட்டு அவை முன்னிருந்தபடியே தமிழ்ப் பாடசாலைகளாகக் கையேற்கப்பட்டன.

7. இப்போது முதல் முறையாக ஜனவரி 73ல் பெற்றோரின் வேண்டுகோள் ஏதுமின்றி இப்பாடசாலைகளில் சிங்களத்தை போதனு மொழியாக ஏற்காத பிள்ளைகளை அனுமதிக்க வேண்டாமென்று கட்டளை இடப்பட்டது. இப்படி போதனு மொழி மாற்றம் திடீரெனச் செய்யப்பட்டு சிங்களம் திணிக்கப்பட்டுள்ளது.

8. ஒரு சிங்களப் பௌத்த தலைமை ஆசிரியர் உட்பட 4 சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டு புத்தூர் பாடசாலையில் 2 தமிழ் ஆசிரியர்களின் உதவியோடு சிங்களத்தை எல்லா வகுப்புகளிலும் திணிக்க முயற்சி செய்யப்பட்டது.

9. பிள்ளைகள் பாடசாலைக்கு வராமல் நின்றனர். பரிசோதகர் பெப்ரவரி 73ல், 2ம் கிழமை வந்தபோது 9 பிள்ளைகளே இருந்தனர்.

10. இப்பிள்ளைகளை வேறு தமிழ்ப்பாடசாலைகளில் அனுமதிக்கக் கூடாதென்றும் கட்டளை இடப்பட்டது. இவர்கள் வேறு பாடசாலைக்குப் போகாவண்ணம் தடை செய்யப்பட்டனர்.

11. புத்தூர் பாடசாலைப் பெற்றோர், 3. 2. 73ல் கூடி தங்கள் பிள்ளைகளுக்கு தமிழ் போதனு மொழியாக இருக்க வேண்டுமென்றும், இந்து சமயம் அவர்களுக்கு போதிக்க வேண்டுமென்றும் தீர்மானித்து 98 பெற்றோர் தனித்தனி அவ்விண்ணப்பத்தை எழுத்தில் வட மாநில வித்தியாதிபதிக்கு அனுப்பினர்.

12. புத்தூர் பாடசாலை மிகப் பெரும்பான்மையாக மீண்டும் தமிழ் இந்துப் பிள்ளைகளையுடையதாய் இருக்கிறது. இப்போது இங்கு 2—8 வகுப்பு வரை தமிழில் இயங்குகிறது. ஆனல் முதலாம் வகுப்பில் சிங்களத்திணிப்பு தொடர்ந்து நடப்பதற்காக ஒரு சிங்கள பௌத்த தலைமை ஆசிரியரைக் கொண்டு இயங்குகிறது.

''இவற்றின் காரணமாகவும், 1ம் வகுப்பில் தமிழைப் போதனு மொழியாக அரசாங்கம் மீண்டும் வைப்பதற்கு மறுப்பதாலும் பிள்ளைகளுக்கு வேறு வசதியான பாடசாலை இல்லாததாலும் இப்பாடசாலையில் தமிழைப் போதனு மொழியாக மீண்டும் வைக்கும் வரையும், கல்வி வசதி மறுக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஒரு புதிய பாடசாலை அவசியமாகிறது.

' இப்படிப் பாடசாலை நிறுவுவது சட்டவிரோதமானலும் தமிழர் கூட்டணி காந்திய தத்துவங்களான சத்தியம், அகிம்சை என்ற அடிப்படையில் சட்ட மறுப்பு இயக்கமாக இதனை மேற்கொள்ளுகிறது. இக் குற்றம் விருந்தின்றி கைது செய்யப்படுவதற்கும் சிறைத்தண்டனைக்கும் உரியது. தெரிவு செய்யப்பட்ட 5 சத்தியாக்கிரகிகள் இப்பாடசாலையின் முகாமையாளராகி சத்தியம் அகிம்சை என்ற அடிப்படையில் தங்களை அர்ப்பணிப்பர்.

''சிங்கள மக்களினதும் அரசாங்கத்தினதும் மனச்சாட்சியை—தமிழ்ப் பிள்ளைகள் மீது இழைக்கப்படும் அநீதி அக்கிரமங்களைப்பற்றி ஆராய இது தூண்டும் என்பதேஇச்சட்ட மறுப்பின் நோக்கமாகும். ஒரு பிள்ளைக்கு தாய்மொழியில் கல்வி கற்கும் உரிமையை தகாத முறையில் நிர்ப்பந்திக்கப்பட்டோ அன்றி வேறு வழியிலோ பெற்றோரோ அல்லது தங்கள் இஷ்டப்படியான நடவடிக்கையினுல் அரசாங்கமோ பறிக்க முடியாது.''

# தாய்மொழியில் கல்வி போதனை இரண்டாவதுமொழியாக ஆங்கிலம்!

## இவைகள் முதலில் சட்டமாக வேண்டும்! அதன்பின்னே சிங்களத்தைப்பற்றி முடிவு!

### ஸ்கந்தவரோதயாவில் தர்மலிங்கம் தெளிவுரை!

'தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதா இல்லையா என்பதை தமிழ் மக்கள் ஆலோசிப்பதற்கு முன் கல்வி மொழியைப் பொறுத்தவரையில் அரசாங்கம் பல முக்கிய தீர்மானங்களை எடுத்து அவற்றை சட்ட மூலம் உறுதிப்படுத்தி நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழே போதனுமொழியாயிருக்கும் என்று கல்வியமைச்சரோ அல்லது கலவி இலாகா உத்தியோகத்தர்களோ மேடைகளில் பேசி விட்டால் போதாது. இதனை சட்டமாக்க வேண்டும்-

—இவ்வாறு உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் சுன்னுகம்ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சிங்களம் கற்பிப்பதா வேண்டாமா என ஆராயும் பொருட்டு நடைபெற்ற மேற்படி கல்லூரி பெற்றோர் — ஆசிரியர் சங்க ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில்கூறினுர்.

சுன்னுகம் பட்டின சபை எல்லைக்குட்பட்ட தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா மகாஜன சபை வடமாநில வித்தியாதிபதி திரு. ரி. மாணிக்கவாசகரிடம் கோரியதனையடுத்து திரு. மாணிக்கவாசகர் இது பற்றி முடிவு தெரிவிக்குமாறு மேற்படி பகுதி பாடசாலைகளை சுற்று நிருபம் மூலம் கேட்டுக்கொண்டார்.

இதனையொட்டியே இக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை (1-4-73) கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. ஏ. ஏகாம்பரம் தலைமையில் நடைபெற்றது.

தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் என்றவகையில் இக் கூட்டத்தில் பங்குபற்றி திரு. தர்மலிங்கம் பேசியதாவது:

''சிறிலங்கா மகாஜன சபை என்னும் ஓர் சபை சுன்னுகம் பட்டினசபை பகுதியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படவேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறதாம். இந்தச் சபையின் பெயரைப் பார்க்கும்போது, இது அனைத்திலங்கைக்கும் பொதுவான சபை போலத் தோன்றுகின்றது. அப்படியிருந்தும், சிங்கள ஆசிரியர் வேண்டுமென்ற தனது கோரிக்கையை அகில இலங்கை ரீதியில் முன்வைக்காமல் — சுன்னுகப் பட்டினசபைப்பகுதிப் பாடசாலைகளுக்கு மட்டும் வேண்டுமென்று கேட்டிருப்பதிலிருந்து, இது அரசியல் குழப்பத்தையும் பூசலையும் தோற்றுவிசகும் சதி நோக்கமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

#### உள்நோக்கம்

''சிங்கள ஆசிரியர் நியமிக்கப்படவேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினையையொட்டி பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் அபிப்பிராயத்தினைக் கேட்டிருப்பதனை ஜனநாயகமுறை என்று ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனல் இந்த விஷயத்தில் மட்டுமன்றி, பாடசாலையின் ஏனைய பிரச்சினைகளிலும் பெற்றோர் ஆசிரிய சங்கங்களின் அபிபிராயத்தைக் கேட்டு கல்வித் திணைக்களம் நடவடிக்கையெடுக்க முன்வருமானல் அது நியாயமாக இருக்கும்.

''எத்தனையோ பாடசாலைகளின் பெற்றோர் ஆசிரிய சங்கங்கள், ஆங்கில, விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை பற்றியும், விஞ்ஞானம் கற்க உரிய வசதிகள் செய்து தருமாறும் கல்விப்பகுதிக்கு விடுத்திருந்த கோரிக்கைகளையிட்டு, கல்விப்பகுதியினர் நடவடிக்கையெடுத்ததாகத் தெரியவில்லை. ஆனல் சிங்களம் போதிக்கும் பிரச்சினையில் மட்டும் கல்விப்பகுதி துள்ளிக்குதித்து நடவடிக்கையெடுத்து வருகிறது.

சிங்களம் போதிக்கும் பிரச்சினையில் மட்டும் பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் விருப்பத்தை கல்விப்பகுதியினர் கோரியிருப்பதன் உள்ளாந்தர நோக்கம், கிராமங்கள் மத்தியிலும் தமிழினத்தின் மத்தியிலும் அரசியல் குழப்பத்தையும் கலவர நிலையையும் உண்டாக்குவதேயாகும்.

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தை ஒரு பாடமாக கற்பிப்பதா இல்லையா என்ற கேள்வியை ஆராய்வதற்கு முன்னா, தமிழ் மக்களின் அடிப்படையான கல்விப் பிரச்சினைகள் பலவற்றுக்கு சட்டரீதியான தீர்வுகாணப்படவேண்டும். அரசாங்கம் தமிழ் மக்களின் கல்விமொழியைப் பொறுத்தவரை பல முக்கிய தீர்மானங்களை எடுத்து அவற்றைச் சட்டமூலம் உறுதிப்படுத்தி நடைமுறைக்குக்கொண்டு வரவேண்டும்.

#### போதனு மொழி

(1) தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழே போதனுமொழியாக இருக்கும் என்று கல்வியமைச்சரோ, கல்விப்பகுதியைச் சேர்ந்த அதிகாரிகளோ வாயளவில் வாக்குறுதி தருவதலோ, மேடைகளில் பேசிவிடுவதனுலோ தமிழினம் திருப்தியடைய முடியாது. இந்த அடிப்படை உரிமையை பாதுகாக்கும் சட்டம் ஒன்று கொண்டு வந்து நிறைவேற்றப்பட வேண்டும்.

போதனுமொழிப் பிரச்சினையில் திட்டவட்டமான ஒரு சட்டம் இல்லாத காரணத்தினுல், ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் தென்னிலங்கையில் கல்வி பெறுவதில் படுகின்ற தொல்லைகளும் கஷ்டங்களும் இன்று அனைவரும் அறிந்த ஒரு விடயமாகும்.

தென்னிலங்கையில், தமிழ் மாணவர்கள் சிங்களத்தில் படிக்கவேண்டிய நிர்ப்பந்தம் பல பாடசாலைகளில் இன்று ஏற்பட்டிருக்கிறது. இப்பிரச்சினை இன்று தென்னிலங்கையில் மட்டும் நிற்காது எங்கள் தமிழ் கிராமங்களுக்கும் — குறிப்பாக புத்தூருக்கும் வந்துவிட்டது.

ஆகவே தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழே கட்டாய போதனுமொழி என்ற உரிமையை இறுக்கமாக நிலை நாட்டும் வகையில் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டும்.

#### பெற்றோர் ஆசிரியர் விருப்பம் அவசியமா?

இந்தப் பிரச்சினையில் பெற்றோரின் விருப்பத்தைக் கேட்கவேண்டிய அவசியமில்லை. ஒரு தாய் குழந்தைக்கு மருந்தூட்டும்போது அதைப் பலவந்தப்படுத்தி, கட்டாயப்படுத்தித்தான் ஊட்டுகிறுள். குழந்தையைக் கேட்டு மருந்து ஊட்டுவதில்லை. அதேபோல ஒரு பிள்ளையின் தாய் மொழியே அதன் போதனு மொழியாக இருக்கவேண்டுமென்பது கல்வி நிபுணாகள் ஏற்றுக்கொண்ட மிகப் பெரிய உண்மை. தாய்மொழிக் கல்வியே ஒரு பிள்ளையின் உள வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் உகந்தது என்பதையும் அறிஞர்கள் அறுதி

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி உரிமைக்குப் போராடுவதா?

# தமிழ் ஈழத்தில் தனி ஆட்சி நிறுவுவதா?

# அல்லது அழிந்தொழிந்து போவதா?

## தமிழினம் இன்றுவிடை காண வேண்டிய மூன்று கேள்விகள்!

'தமிழ் மக்களை அடக்கி ஆளுவோரின் காலைப் பிடித்துக் கெஞ்சி அவர்களிடம் பிச்சை பெற்றும் பெற முடியாத உரிமைகளைப் பெற்று விட்டோம் என்று கொக்கரிக்கும் உலுத்தர்களும் பனியர்களும் இன்றும் மக்கள் உருவில் நடமாடுவது 20ம் நூற்றாண்டின் பேர் அதிசயமாகும்.

அரசியல் அமைப்புச் சட்டத்தில் தமிழுக்கு நீதிமன்ற அந்தஸ்துக் கொடுக்குமாறு அரசாங்கத்தை தமிழரசுக் கட்சியினர் அரசியல் நிர்ணய சபையிலும் வெளியிலும் வற்புறுத்திய பொழுது கொடுக்க முடியாது என்று அரசாங்கம் அடம் பிடித்ததாலேயே தமிழரசுக்கட்சியினர் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து வெளியேறினர் இதுவே எங்கள் அசைக்க முடியாத நிலைமை. அன்றும் இன்றும் என்றும்;

அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் கொடுக்காவிடினும் தேசிய அரசுப் பேரவையில் சட்டமூலம் தமிழுக்கு நீதிமன்ற மொழி அந்தஸ்து கொடுப்போம் என்று அரசாங்கம் தமிழரசுக் கட்சியினருக்குக் கூறியது மட்டுமன்றி, இவ்வாறு செய்வோம் என்பதை அரசியல் நிர்ணய சபையிலும் தெரிவிப்போம் எனக்கூறி அவ்வாறு அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அரசியல் நிர்ணய சபையிலும் தெரிவித்தார்;

### உலக்கை தேய்ந்து உளிப்பிடி!

நிலைமை இவ்வாறிருக்க கட்சிகளினால் தூக்கியெறியப் பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒரு வாக்குத் தானும் பெறாமல் திடீர் அமைச்சரான ஒருவரும் தாங்கள் செய்த தொண்டால் இது கிடைத்து விட்டதென்று பிரசாரம் செய்வதால் யாரை ஏமாற்ற முடியும்? இப்பொழுது நிறைவேற்றப்பட்டது விசேட நீதி மன்ற மசோதாவும் 'உலக்கை தேய்ந்து உளிப் பிடி ஆனது' போல, ஓர் அமைச்சருக்கு பிரமாணங்

**கா. பொ. இரத்தினம் பா. உ.**

களை தேசியப் பேரவையில் கொண்டுவந்து நிறைவேற்றி நடைமுறைப்படுத்த அதிகாரம் கொடுத்துள்ளது. நீதி மன்றங்களில் தமிழுக்குப் பூச்சாண்டி காட்டிக் கொண்டு ஒழுங்கு விதிகளை வருடக்கணக்கில் நிறைவேற்றாமல் தள்ளிப் போடலாம். இந்த விஷயத்தில் இந்த அரசாங்கம் கைதேர்ந்தது.

1958 நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி விசேட சட்டமும் தமிழர்களைப் 'பேய்க் காட்ட'ச் செய்யப்பட்டவையே.

இரண்டு சட்டங்களும் ஒழுங்கு விதிகள் நிறைவேற்றப்படாமல் நடைமுறைப்படுத்த முடியாதவை.

### பிணச் சட்டம்

தமிழ் மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 14 ஆண்டுகளாகியும் இந்த அரசாங்கங்கள் ஒழுங்கு விதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. தேசிய அரசாங்கம் ஒழுங்கு விதிகளை நிறைவேற்ற 1966ல் நடவடிக்கை எடுத்தபோது அதனை இந்த அரசாங்கம் மும்முரமாக எதிர்த்தது. தேசிய அரசாங்கம் நிறைவேற்றிய ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்த மாட்டோம் எனப் பராளுமன்றத்திலும் அரசியல் நிர்ணய சபையிலும் மூன்று முறை இரண்டு அமைச்சர்களும் அழுத்தம் திருத்தமாக கூறிவிட்டார்கள்.



எனவே நான் தேசிய அரசுப் பேரவையில் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கும் அமைச்சர் குமாரசூரியருக்கும் எடுத்துக் கூறியது போல தமிழ் மொழிச் சட்டம் உயிர் போன பிணச்சட்டமேயாகும். இதைப்போலவே நீதிமன்ற தமிழ் மொழிச் சட்டமும் பிணச் சட்டமாக ஆக்கப்படும் என்பதை காலம் விரைவில் காட்டிவிடும்.

### ஒரு மொழி ஒரு நாடு

அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் அவரைப் போன்ற தீவிரவாதிகளும் பாராளுமன்றத்திலும் வெளியிலும் கூறுவதுபோல சிங்களம் மட்டுமே இந்நாடு முழுவதற்கும் தமிழ்ப் பகுதி உட்பட உத்தியோக மொழியாக ஆக்கப்படும். தமிழ்ப் பாடசாலைகளில் படிப்படியாகச் சிங்களமே போதனு மொழியாகவும் ஆக்கப்படும். ஒரு மொழி ஒரு நாடு எனும் தீவிர சிங்கள ஏகாதிபத்திய கொள்கையையே இந்த நாட்டு சிங்கள அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கையைக் கொண்டு விட்டன என்பதை சாதாரண அறிவுள்ள மக்களும் நன்கு அறியலாம்.

எனவே தமிழ் மக்களுக்கு இப்பொழுது உள்ள பிரச்சினை, ஈழத் தமிழகத்தில் தமிழ் மொழியைத் தனி ஆட்சி மொழியாக்குவதற்குப் போராடுவதா தனி ஆட்சி உரிமையைப் பெறுவதா-அன்றேல் அரசாங்கத்தின் மருட்டலுக்கும் வெருட்டலுக்கும் சலுகைக்கும் பொய்ப் பிரசாரத்துக்கும் சரிந்து கொடுத்து சிங்களத்தைத் தமிழ் பகுதிகளில் ஆட்சி மொழியாகவும், வீட்டு மொழியாகவும் ஏற்று இரண்டொரு தலைமுறைகளில் போலிச் சிங்களவராகுவதா என்பதேயாகும்.

### அமைச்சரின் கைகளில் தமிழரின் தலைவிதி!

சிங்களத்துக்கு நாடு முழுவதற்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்ட ஆட்சி மொழி உரிமையையும் தமிழ்ப் பகுதிகளில் தமிழுக்கும் அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் உரிமை கொடுப்பதால் யாருக்கு என்ன கேடு உண்டாகிவிடும் என்பதை இன்று வரை அரசாங்கமோ தமிழரிடையே அரசாங்கத்துக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## பத்தாண்டுகளுக்குப் பின்னர் கம்யூனிஸ்டுகள் தமிழ் மக்களிடம் கேட்கப்போகும் 'பாவமன்னிப்பு!'

## யாழ். கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு வேண்டுகோள்!

**யாழ்** மாவட்ட கம்யூனிஸ்ட்களின் அங்கத்தவர்களே, உங்களிடம் ஒரு கேள்வி நீங்கள் விடும் தவறுகளை பத்து வருடங்களுக்குப் பின்னர் தான் உணருவது வழக்கமாகிவிட்டது, இந்நிலை இனியும் தொடரத்தான் வேண்டுமா?

யாழ்மாவட்டக் கம்யூனிட் கட்சித்தோழர்களாகிய நீங்கள் தலைமைப்பீடத்திற்குச் சமர்பித்த இரகசிய அறிக்கையின் ஒருபகுதி இதோ:—

..."ஆனால் இக்காலகட்டத்தில் எமது பிரதேசக் கிளை விட்ட தவறுகளை விமர்சிக்கும் கடமை எங்களுடையதே இப்பிழைகள் பின்வருமாறு:

"தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவற்றை அவர்கள் மத்தியில் திணிக்க முயற்சித்தமை.

"1961ம் ஆண்டு தமிழரசுக் கட்சி கச்சேரி முன்பு சத்தியாக்கிரகம் செய்தபோது எமது கட்சி சில துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டதன் மூலம் மொழிப்பிரச்சினையை சத்தியாக்கிரகமாக அன்றிப் பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்க்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டினோம். இது சரியாக இருந்தபோதும் அரசாங்கத்தைத் தமிழ் மொழி விசேடமசோதாவை அமுல் நடத்தும்படி வேண்டிய விதிகளை தயாரிக்கத்தவறியதைக் கண்டிக்கத் தவறிவிட்டோம்.

"அதேபோல பொலிஸ் இராணுவத்தின் அத்துமீறிய அட்டூழியங்களையும் கண்டிக்கத் தவறிவிட்டோம்.

"1966ம் ஆண்டு தைமாதம் 8ம் திகதி கொழும்பில் ஏற்பட்ட சம்பவங்களைப் பற்றி எமது பிரதேசக் கமிட்டி எடுத்த முடிவுகளும் அதே வருடம் மே தினக்கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்களும், இதே காலங்களில் கட்சிப்பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளும் தமிழ்மக்கள் மத்தியில் எமது கட்சிமீது வெறுப்பேற்படுத்தக் கூடிய சம்பவங்களேயாகும்.

"இத்தவறுகளைத் திருத்தாமலும் பொது மக்கள் மத்தியில் அடிப்படையான வேலைகளைச் செய்யாமலும் பொது மக்களின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் பலசந்தர்பவாதக் கருத்துக்கள் மூலம் உடன்படிக்கைகளை ஏற்படுத்தமுயற்சித்தோம்!"

ஆம் ஆவணி 4-5-1971இல் இப்படித்தவறுகளைச் சுட்டிக் காட்டித் தலைமைப்பீடத்திடம் மன்றாடுகிறீர்கள். ஆனால் அதே தவறுகளை இப்போது விடுகிறீர்களே. அது ஏன்?

இப்பொழுதுவிடும் தவறுகளை இன்னும் பத்தாண்டுகள் கழித்து 1983ம் ஆண்டுதான் உணருவீர்களா?

நீங்கள் 1983ம் ஆண்டு தலைமைபீடத்திற்கு சமர்ப்பிக்கப்போகும் அறிக்கையை நாம் தீர்க்க தரிசனத்துடன் கீழே தருகின்றோம்.

"நாம் விட்ட தவறுகளை 1971ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அங்கத்தவர்களுக்கிடையே நடைபெற்ற இரகசிய மகாநாட்டில் ஒப்புக்கொண்டு தலைமைப்பீடத்திற்கு அறிக்கை சமர்பித்திருந்தோம். ஆனால் அத்தவறுகளை நிவர்த்தி செய்யும் முறையில் தலைமைப்பீடம் இம்மியும் நடந்துகொள்ளவில்லை. மேலும் தமிழ் மக்களின் மீது மிகத்தவறாகவே நடந்து கொண்டது. இதை விமர்சிப்பது எமது கடமை. அத்தவறுகள் பின்வருமாறு:

"தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளமுடியாத — அவர்களை இனம் மாற்றக்கூடிய— அடிமைப்படுத்திய அரசியல் அமைப்பை எமது கம்யூனிஸ்ட் கட்சியின் பரிபூரண ஒத்துழைப்புடன் அவர்கள் மத்தியில் திணித்தமை.

"1973ம் ஆண்டு தமிழர் கூட்டணி பகிஷ்காரமும், உண்ணாவிரதமும், மற்றும் அறப்போராட்டங்களும் நடத்திய போது எமது கிளை அவற்றைக் கேலி செய்து துண்டுப்பிரசுரம் அடித்து வெளியிட்டது;

'புத்தூர் பாடசாலையில் சிங்களத்தைப் போதனாமொழியாகத் திணித்த போது எமது கிளையும் அதற்கு ஆதரவு கொடுத்தமை.

"தமிழ் மாணவர்களின் கல்வி வாய்ப்புகளைக் குறைக்கும் மாபெரும் சதித்திட்டமான தரப்படுத்தலை எமது அங்கத்தவரான கல்வி உதவி அமைச்சர் துடாவை முன்னின்று அமுல் நடத்தியமை.

"வடக்கு, கிழக்கு, தெற்கில் மூன்று பல்கலைக்கழகம் தருவதாகக்கூறி ஏமாற்றியமை.

"1966ம் ஆண்டு தைமாதம் 8ம் திகதி நிறைவேற்றிய தமிழ்மொழி விசேடவிதிகள் சட்டத்தை எதிர்த்து தற்கொலையாக சுட்டுக்கொல்லப்பட்ட பௌத்த பிக்குவுக்கு நினைவுச்சின்னம் எழுப்பியதில் எமது தலைவர் பீற்றர் கெனமன் அவரை முற்போக்குவாதி என்று பேசியமை.

"தமிழ் மொழி விசேட [illegible] முடியாது என்று பீலிக்ஸ் ஆர் டயஸ் கூறிய போதும் எமது அங்கத்தவர்கள் மௌனமாக இருந்தமை.

"காசிஆனந்தன்—வண்ணை ஆனந்தன், மற்றும் இளைஞர்கள் சிறையில் நெடுங்காலம் இருந்தபோதும் நாம் அவர்களைப்பற்றி எந்நடவடிக்கையும் எடாது வாழா விருந்தமை.

'அரசாங்கத்தின்மீது தமிழ் மக்கள் வெறுப்புக்கொண்டு போராடிக் கொண்டிருக்கும் வேளையில் அரசு அமைச்சர்களுக்கு வரவேற்புக்கொடுத்துப் பாராட்டியமை;

"காங்கேசன் துறைத்தேர்தலில் செல்வநாயகம் அவர்களை ஏகமனதாக அனுப்பாது தமிழ் மக்களின் விண்ணப்பத்துக்கு முரணாக நமது வேட்பாளரை நிறுத்திகட்டுப்பணம் இழந்து நிறுத்திய வேட்பாளரை உலகத்தமிழ் மக்களே ஒரு எதிரியாகக் கணிக்கச் செய்தமை."

"இதுபோல எத்தனையோ தவறுகளை நாம் சுட்டிக் காட்டலாம். இந்நிலையில் தமிழ் மக்களிடையே நாம் எவ்வாறு உலாவமுடியும்."

எனவே, கம்யூனிஸ்ட் தோழர்களே உடனடியாக யாழ் மாவட்ட அங்கத்தவர்களைக்கூட்டி நீங்கள் விடும் தவறுகளைத் திருத்தமுயற்சியுங்கள் அல்லது தலைமைப் பீடத்துடனான உறவுகளைத் துண்டித்துத் தனியாக இயங்குங்கள்.

இதுவே நீங்கள் பத்தாண்டுகள் கழித்து கேட்கப்போகும் 'பாவமன்னிப்பு' ஆகும் இன்றே திட்டவட்டமாக நாம் அதைக் கூறுகிறோம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுடச் சுட . . .

'கொலை செய்வதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. ஆட்களைக்கொலை செய்வது அரசியல் அல்ல'—

—வி. பொன்னம்பலம்.

—உண்மைதான்தோழரே! உண்மை தான். ஆனால் இதை நீர் அன்பே வழியாகக் கொண்ட தமிழனுக்கு கூறத்தேவையில்லை. உங்கள் சோவியத் நாட்டு கம்யூனிஸ்டுகளுக்கு, ஏனைய வெளி நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு இதைக் கூறுங்கள்! அரசியலுக்காக ஸ்டாலினும், பெரியாவும், நாகியும் இன்னும் பலரும் கொலை செய்த மிலேச்சர்கள் கம்யூனிஸ்டுகளே என்பது வரலாற்றுண்மை!

ஃ

'தமிழ்பேசும் மக்களுக்கு மேலும் நன்மைகளை சாதிப்போம்'

—மந்திரி குமாரசூரியர்.

—'இதுவரை தமிழ் மக்களுக்காகச் சாதித்த நன்மைகளில் ஐந்தினைக் கூறும் படியாகத் தமிழ் மக்களே கேட்கிறார்கள். அமைச்சர் என்ன கூறப்போகிறார்?

ஃ

'பிற்போக்கு வாதிகள் பருப்பு, தமிழரிடம் வேகாது'

—லெஸ்லி.

—இவரது பருப்பு எம்மிடம் வேகாது என்று தமிழ் மக்கள் கூறி வைக்க விரும்புகிறார்கள்.

ஃ

'தமிழ் மொழியை காப்போம் என நிதி அமைச்சர் உறுதி'

—செய்தி

—பாலுக்கும் காவல் இவர் பூனைக்கும் தோழன்.

ஃ

'யாழ்ப்பாணத்தில் மிக விரைவில் பல்கலைக்கழகம்'

—என். எம்.

—இரு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளைக் கல்வி அமைச்சர் வெற்றிகரமாக மூடிவிட்டார். ஆனால் நிதி அமைச்சர் பல்கலைக்கழகம் அமைக்கிறார். 'யாரைக் கலைக்க இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்படுகிறது' என தமிழ் மாணவர்கள் கேட்கிறார்கள்.

ஃ

'மொழி சம்பந்தமான பிரச்சினைகள் இருப்பின் அவற்றையும் சுமுகமாகப் பேசித்தீர்க்கலாம்'

—என். எம்.

'—தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளி விடும்' தீரர், இவர்.

ஃ

'தமிழ் மக்களுக்கு எதிராக நாம் எதையும் செய்ய மாட்டோம்'

—மெனமன்.

—தமிழ் மக்களுக்குச் சாதகமாக இவரது அரசு இது வரை எதனைச் சாதித்துள்ளதாம்?

ஃ

'கறுப்புக்கொடி காட்டினால் வட பகுதியைப் பகிஷ்கரிப்போம்'

—மந்திரிகொப்பேக்கடுவ.

—இவர்தான் 'காணிகள் சிங்களவருக்கே வழங்கப்படும். தமிழருக்கு இல்லை' என தேசிய பேரவையில் கூறியவர். இப்போது பகிஷ்கரிக்கப் போகிறோம் என்கிறார். சொல்லைச்செயலாக்கட்டும் பார்க்கலாம். தமிழருக்கு எதிராக வகுப்புவாதம் பேசியவர்கள் எத்தனையோபேர்கள் இப்போது இருந்த இடமும் தெரியாது இருக்கிறார்கள்; சிலர் மறைந்துவிட்டார்கள். இப்போது இவர் தொடங்கி உள்ளார்: அமைச்சரே நா காக்க.

ஃ

'யாழ்ப்பாணத்தவர்கள் பணக்காரர்களாகிவிட்டனர்'

—கம்பளை பா. உ.

—முயற்சி திருவினை ஆக்கும் என்ற வள்ளுவன் வாக்கினை அறியாதவர்கள் வயிற்றெரிச்சல் கொள்ளுகிறார்கள்.

ஃ

'ஐக்கிய இலங்கையே அரசின் இலட்சியம்: குடாநாட்டைச் சுற்றி மதில் எழுப்பி மக்களைப் பிரிக்க எத்தனிக்காதீர்'

—என். எம்.

—'மதில் எழுப்பக் கருங்கற்களைத் தூக்கித் தந்துகொண்டே மதில் எழுப்பாதீர்கள்' என்றால்...?

ஃ

'பலாலியில் சிவப்புக் கொடி, பரந்தனில் கறுப்புக் கொடி'

—செய்தி.

—பலாலியில் குழுமி நின்ற தோழர்கள் 'பரந்தனுக்குப் போகாதீர்கள். கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடாத்துவார்கள்' எனக் கூறியே நிதி அமைச்சருக்குச் சிவப்புக்கொடி காட்டினார்கள். ஆனால் அமைச்சர் சிவப்புக்கொடியை அலட்சியப்படுத்திப் பரந்தன் சென்றார். கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தினைக் கண்டு முகம் கறுத்திட நேர்ந்தது.

ஃ

'இரண்டு மாதங்களில் சாராய வடிசாலை'

என். எம்.

—தமிழர்களே, குடித்துக் குடித்துக் குட்டிச் சுவராய்ப் போங்கள்.'!

ஃ

'பிரதேச மொழிகளில் கச்சேரி நிர்வாகம். வடக்கில் பல்கலைக்கழகவளாகம்'

—என். எம்.

—யாழ்ப்பாணத்து மண் வாசனை இப்படியெல்லாம் பேச வைத்தது. இவைகளெல்லாம் காற்றில் கலந்து விடும் வாக்குறுதிகள். சும்மா மெல்லும் இங்குள்ள இவர்களது வால்பிடிகள் வாயில்போட்டு மெல்லட்டும் என அமைச்சர்கள் அவல் கொடுத்துச்செல்லுகிறார்கள்.

ஃ

தபால் மந்திரிக்கு மட்டக்களப்பில் கறுப்புக் கொடி.

—செய்தி.

'—துரோகிகளுக்குச் சென்ற விடமெல்லாம் கறுப்பு'

ஃ

'நாடு முன்னேற மக்கள் ஒத்துழைப்புத்தேவை'

—என். என்.

—இப்போது தமிழ் மக்களின் ஒத்துழைப்புத்தேவை. தேவை முடிந்த பின் இவர்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து தமிழ் மக்களை ஒத்து உதைப்பார்கள் போலும்.

ஃ

'யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாகத்தில் ஊழல் எதுவும் இடையாது'

—பீலிக்ஸ்

'துரோகத்திற்கு நற்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதா என்று கேட்கிறான் யாழ். மாநகர வரியிறுப்பாளன்.

—"கழுகு"

# பொதுமன்றங்களில் இனியும் தமிழ்த் துரோகிகளுக்கு இடமா?

## எதிர்ப்பு உருவாகி வளர்ந்து வருகிறது!!

பெற்றோர் சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்ற பொதுமன்றங்களில், தமிழ் இனத்தின் அபிலாசைகளுக்கு விரோதமாக, அரசாங்கத்துடன் சேர்ந்து தமிழ் மக்களை காட்டிக் கொடுத்து வரும் தமிழ்த் துரோகிகள் அங்கம் வகிப்பதற்கு ஆங்காங்கே கடுமையான எதிர்ப்பு உருவாகி வளர்ந்து வருகிறது. இத்தகைய மன்றங்களிலிருந்து தமிழ்த் துரோகிகள் வெளியேற்றப்பட வேண்டுமென்றும் மன்றங்கள் நடாத்தும் விழாக்களுக்கு இவர்களை அழைக்கக் கூடாதென்றும் உணர்ச்சி மிக்க தமிழ்மக்கள் கோரி வருகிறார்கள்.

அண்மையில் நடந்த யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலைப் புதிய கட்டடத்திறப்பு விழாவுக்கு நல்லூர் பா. உ. திரு. சி. அருளம்பலத்தை அழைத்ததை ஆட்சேபித்து ஏராளமான பெற்றோர் அதைப் பகிஷ்கரித்துள்ளனர். இது சம்பந்தமாகபெற்றோர்கள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழினம் தாங்கள் சிறுமைப்படுத்தப் படுவதை எண்ணிக் குமுறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் ஆங்காங்கே நடக்கும் சிறுவிழாக்களில்கூடத் துரோகக் கும்பல்கள் எவ்வாறோ நுழைந்து குட்டையைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன. இன்றைய அரசாங்கத்தின் கையில் தமிழ் மக்களுக்குரிய கல்வி பயங்கரமான ஆயுதமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. அரசாங்கம் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே துரோகிகளுக்கு வழிதிறந்துகொண்டு வருகிறது. இவைகளுள் ஒன்றுதான் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியசங்கங்களாகும். இவற்றுள் துரோகிகளைப் புகுத்துவதன் மூலம் ஒரு காலத்தில் சிங்களக் கல்வியைக்கூடப்புகுத்திவிடலாமெனக் கனவு காணுகிறது சிங்கள அரசு.

### துரோகிக்கு இடமா?

இந்நிலையை சிலர் அறியாமையாலும், துரோகத்தனத்தாலும் உறுதிப்படுத்தி ஆங்காங்கே நடக்கும் சிறு விழாக்களில்கூட ஆளுங்கட்சிக் கும்பலை உள்ளுக்கிழுத்து விட நினைக்கின்றார்கள். இச்சந்தர்ப்பத்தில் மக்கள் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டுமெனக் கோப்பாய்ப் பெற்றோர்களாகிய யாம் தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

கோப்பாய், நல்லூர்த் தொகுதிப் பிள்ளைகள் கல்வி கற்றுவரும் மேற்படி வித்தியாசாலையில், கோப்பாய்ப் பிள்ளைகளும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் கோப்பாய்ப் பெற்றோர்களும்பங்கு கொண்டவர்கள். அவர்களினதும், நல்லூர்த் தொகுதிப் பெற்றோர்களினதும் எதிர்ப்பையும்பொருட்படுத்தாமல் தமிழ்த்தாயின்சிதையில்எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கும் துரோகக் கும்பல்களுள் ஒருவரான திரு. சி. அருளம்பலத்தை அழைத்ததன் மூலம் ஆசிரியர்கள் திட்டமிட்டுச் செயலாற்றியுள்ளனர்.

நல்லூர்ப் பிரதிநிதி தமிழினத்தாற் புறக்கணிக்கப்பட வேண்டியவர் எனத் தமிழினம் தீர்மானித்துவிட்ட பின்னர் அடிவருடிக் கும்பல்கள் [illegible] வெறுப்பு முயல்வதேன்? பெற்றோருக்கு மதிப்பளியாமல் ஆசிரியர்கள் தாங்கள் சுயநலம் கருதுதல் சமூகத்தின் மதிப்பிற்குரியதா? ஆசிரியப்பணியின் புனிதமென்ன?

இதேபோன்ற செயல்கள் ஆங்காங்கே நடைபெறுவதைத் தமிழ்மக்கள் முற்றாகத் தடைசெய்ய வேண்டும். எங்களுக்கு அநீதி இழைத்துவிட்டு இங்கு வரும் அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டுவதன் முன்னர் இவர்களைப் போன்றவர்களுக்குத் தமிழினம் பாடம் புகட்ட வேண்டும்.

இதேபோன்றவிழாக்களில் துரோகிகளுக்கு அச்சந்தர்ப்பத்திலும் தமிழ்மக்கள் இடமளிக்க வேண்டாமெனப் பெற்றோர்களாகிய நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

### பழைய மாணவர் எதிர்ப்பு

இதேபோல யாழ் — கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவ மாணவியர் சங்கத்தின் போஷகராக அருளம்பலம் பா. உ. இருப்பதனை ஆட்சேபித்து மேற்படி பாடசாலையின் பழைய மாணவனும், கட்டுப்பெத்தை பொறியியல் மாணவனுமாகிய திரு. மு. இராமச்சந்திரன் மேற்படி வித்தியாலயத் தலைவருக்கு ஒரு கடிதத்தைஎழுதியுள்ளார். அதில் அவர் கூறுவதாவது:—

தமிழினத்தையும் அதன் உரிமைகளனைத்தையும் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு அடைவுவைத்து அதன்மூலம் சிறு சலுகைகள் பெற்று வயிறு வளர்க்கும் அருளம்பலம் இன்னும் பழையமாணவர் சங்கத்தில் போஷகராக இருப்பதனால் நான் மட்டுமல்ல உண்மைத் தமிழர்கள் அனைவரும் சங்கத்திலிருந்து எமது அங்கத்துவத்தை இராஜினாமாச்செய்துகொள்வோம் என்பது உறுதி.

பழைய மாணவர் சங்கத்தை ஒருசில சுயநலமிகள் மேடையாகப் பாவித்து அருளம்பலம்,மூலம் அன்னைத் தமிழை ஆட்சியாளர்கட்கு அடைவு வைத்து அற்ப சலுகைகள் பெற்று வயிறுவளர்ப்பதற்கு நானும் என்போன்ற மற்றையோரும் உடந்தையாக இருக்கமாட்டோம். என்பதை உறுதியாகக் கூறி வைக்கின்றேன்.

உயர்தரவகுப்பு தமிழ் மாணவர்கள் இரவும் பகலும் அயராது படித்து தமது திறமையைக்காட்டி அதன் மூலம் பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பை வருடாவருடம் நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசாங்கம் பறித்து வருகின்றது. இந்தக் கொடூரமான அட்டூழியச் செயலால் எஞ்சினியர்களாகவும் டாக்டர்களாகவும் வரவேண்டிய அனேக தமிழ்மாணவர்கள் தமிழன் என்ற ஒரே ஒரு காரணத்தால் ஒதுக்கப்பட்டு இன்று விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அருளம்பலத்தின் உடம்பில் ஓடுவது தமிழ் இரத்தமானால் இந்தஅட்டூழியத்தை பச்சை இன ஒதுக்கலை எதிர்த்து தேசிய (சிங்கள) அரசப்பேரவையில் குரல் கொடுப்பாரா?

---

## மொழி உரிமை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வக்காலத்து வாங்குபவர்களோ விளக்கவில்லையே!

தமிழுக்கு அரசியல் அமைப்புச் சட்ட உரிமை கொடுத்தால் நினைத்தவுடன் அந்த உரிமையை அழித்து விட முடியாது. அமைச்சரின் விருப்பப்படிஒழுங்கு விதிகளை நிறைவேற்றும் உரிமையை மட்டும் தமிழுக்குக் கொடுத்தால் ஒழுங்கு விதிகளை நிறைவேற்றாமலும் நிறை வேற்றிய ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தாமலும் விடலாம். யாரேனும் தட்டிக் கேட்டால் ஒழுங்கு விதிகள் சிங்களம் மட்டும் சட்டங்களுக்கு மாறானவை, விரும்பினால் நீதிமன்றம் போய்ப் பாருங்கள் என்று அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் எனக்குப் பாராளுமன்றத்தில் கூறியதைத் திரும்பத் திரும்பக் கூறலாம்.

இன்றுவரைதமிழ்மொழிச் சட்டத்தின் படி சிங்கள அரசாங்கங்கள் ஆட்சித்துறையில் — வடக்குக், கிழக்கு மாகாணங்கள் உட்பட தரமாக எந்தந்த தமிழ்மொழி உரிமையை உவந்து அளித்திருக்கின்றன என்பதை வெளியிடுமாறு நான் அரசாங்கத்துக்கு பொறுப்பு உணர்ச்சியுடன் சவால் விடுகிறேன்.

### தமிழ் புறக்கணிப்புக் கண்காட்சி

ஆட்சித் துறையிலும் படிவங்கள் அறிக்கைகள் வெளியீடுகள் பெயர்ப் பலகைகள் கடிதங்கள், கடித இதழ்கள் முதலியனவற்றில் தமிழும் இடம் பெற்றிருப்பது நாங்கள் பாராளுமன்றத்திலும் வெளியிலும் எழுப்பிய வினாக்களாலும், அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சுட்டிக்காட்டி எழுதிய நூற்றுக்கணக்கான கடிதங்களாலும் தமிழ் அபிமானம் உள்ள பொதுமக்களின் புகார்களினாலும் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் நிறுவப்பட்ட பின் செய்து வரும் தமிழ்ப் புறக்கணிப்பையும், தமிழர் புறக்கணிப்பையும் எல்லோரும் கண்ணூறக் காணுதற்கு ஒரு தமிழ்ப் புறக்கணிப்புக் கண்காட்சியை நடத்தவும் தொண்டர்கள் பலர் முயலுகிறார்கள். இதுவரை அரசாங்கத்துடன் தமிழிலே தொடர்பு கொள்ளாத — பாராளுமன்றத்தில் தமிழில் பேசாத சிங்களத்தில் வருபவற்றைப் பேசாமல் குப்பைக் கூடைக்குள் தள்ளுகிற அரசாங்கத்தின் அடிமைத் தமிழர்களையும் அமைச்சர் பெருமக்களையும் இக் கண்காட்சிக்கு அழைப்பார்கள். அப்பொழுது உண்மையை எவரும் காணலாம்.

---

## அட்டன் கிளை நிர்வாகிகள்

அரசினர் ஆசிரிய சங்கம் அட்டன் கல்வி வட்டாரக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 25-3-73 அன்று புனித பொஸ்கஸ் கல்லூரியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. ரி. பரராசசிங்கம் தலைமை வகித்தார்.

புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவு பின்வருமாறு. தலைவர்:- திரு. ரி. பரராசசிங்கம், உபதலைவர்கள்:- திரு. ஏ. செபஸ்தியன், திரு. வி. சிவசாமி. செயலாளர்:- திரு. ந. சிவபாதம், உப செயலாளர்:- திரு. எம். நாகலிங்கம். பொருளாளர்:- திரு. வி. சிவகுரு. ஏழு பேர் கொண்ட நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதால் வரும் தீமைகள்!

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டுக் கூறியிருக்கிறார்கள்' எனவே, ஒரு அரசாங்கம் தாயாக இருந்து, ஒரு பிள்ளையின் தாய்மொழியையே அதன் கட்டாய போதனு மொழியாக்குவதில் எவ்வித தவறும் கிடையாது.

ஆறுவயது தொடக்கம் பதினைந்து வயது வரை பிள்ளைகள் பாடசாலைகளில் இருக்கவேண்டுமென்பது இந் நாட்டின் சட்டம் ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சியை பொறுத்த விஷயம் என்ற காரணத்தினால் இவ் விஷயத்தில் பெற்றோரின் விருப்பம் கேட்கப்படவில்லை. அதுபோலத்தான் போதனு மொழி பற்றியும் பெற்றோரின் விருப்பத்தைக் கேட்கத் தேவையில்லை. தமிழ்மொழி, தமிழ் பிள்ளைகளின் கட்டாய போதனு மொழியென்பது சட்டமாக்கப்படவேண்டும்.

## இரண்டாவது மொழி

(2) தமிழ் பிள்ளைகளின் கட்டாய போதனுமொழி தமிழ் என்பது சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், இரண்டாவது மொழியாக எதைப்படிப்பதென்ற கேள்வி அடுத்து எழுகிறது.

சிங்களப் பிள்ளைகளுக்கு இரண்டாவது மொழி ஆங்கிலம் என்பதனை அரசாக்கம் ஏற்றுள்ளது மட்டுமன்றி அதனை அமுல் செய்ய நடவடிக்கையும் எடுத்துவருகின்றது. இந்த நோக்கத்துடன், சிங்களப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு பல்லாயிரக்கணக்கான ஆங்கில ஆசிரியர்களை இன்றைய அரசாங்கம் நியமித்துள்ளது.

சிங்கள மாணவர்களுக்கு ஆங்கிலம் இரண்டாவது மொழியாக இருப்பதுபோல் தமிழ் மாணவர்களுக்கும் ஆங்கிலம் இரண்டாவது கட்டாயமொழியாக இருக்க வேண்டும். இதை சட்ட மூலம் வரையறுத்து, அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும்.

சிங்கள மாணவர்களிலும் பார்க்க இன்று இருக்கும் சூழ்நிலையில் இரண்டாவது மொழியாக இருப்பது மிக அவசியமானது.

தமிழ் மாணவர்கள் மேற்படிப்பு பெறுவதில் கஷ்டம் உண்டு என்பதை அனைவரும் அறிவீர்கள்.

சர்வகலாசாலையிலும் மற்றைய உயர்படிப்புக் கல்விக் கூடங்களிலும் தமிழ் மாணவர்கள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

இந் நிலையில் தமிழ் மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தம் மேற்படிப்பைத் தொடர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

தென்னிந்தியாவிற்குச் சென்று மேற்படிப்பு படிக்கக் கூட ஆங்கிலம் அவசியம். ஏனெனில் தென்னிந்திய சர்வகலாசாலையில் மேற் கல்விக் கூடங்களிலும் ஆங்கிலம் கட்டாய பாடமாக உள்ளது. அது மட்டுமல்ல எமது இளைஞர்களுக்கு அரசாங்கத்தில் வேலைவாய்ப்புக்கள் குன்றி வருகின்றன. வேலை கிடைத்தாலும் பல விதத்திலும் எம் இளைஞர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். இந்நிலையில் அவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று உத்தியோகம் பார்ப்பது அவசிய மாகிறது.

இன்று இங்கிலாந்தில் மட்டும் 12,000 இலங்கைத் தமிழர்கள் வேலைகளில் அமர்ந்துள்ளனர்.

இவர்களுக்கு ஆங்கில அறிவு இருந்தபடியால்தான் வேலைபார்க்கக் கூடியதாக இருக்கிறது. ஆகையினால் சிங்களவர்களை விட தமிழர்களுக்கே ஆங்கில அறிவு முக்கியம். ஆங்கிலம் இரண்டாவது மொழியாக இந் நாடு முழுவதும் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் சட்ட மூலம் வரையறுக்க வேண்டும்.

## சிங்களத்துக்கு எந்த இடம்?

(3) தமிழ், தமிழ்பிள்ளைகளின் கட்டாய போதனு மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாவது கட்டாய மொழியாகவும் சட்டமூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே சிங்களத்தை மூன்ருவது மொழியாக படிப்பதா இல்லையா என்ற கேள்வி எழ முடியும். அப்படி சிங்களம் மூன்ருவது மொழியாகப் படிப்பிக்கப்படுமானுல், அது எந்த வகுப்புத் தொடக்கம் படிப்பிக்கப்படும் என்பதனை அரசாங்கம் தெளிவாகக்கூற வேண்டும்.

உலக கல்வி நிபுணர்களின் கூற்றுப்படி ஒருபிள்ளையின் ஐந்தாவது வகுப்பில் இரண்டாவது மொழியும் 7ம் அல்லது 8ம் வகுப்பில் மூன்ருவது மொழியும் புகட்டவேண்டும் என்றும், அப்பொழுதுதான் அப்பிள்ளையின் மனதில் 'சுமை' இருக்காது என்றும் கூறுகிருர்கள். எனவே சிங்களத்தை மூன்ருவது மொழியாகப்படிப்பிப்பதானுல், எந்த வகுப்புத் தொடக்கம் படிப்பிப்பது? இந்தக் கேள்விக்கு தெளிவான திட்டவட்டமான விடை காணப் படவேண்டும்!

இன்று கிழக்கு மாகாணத்திலும், மற்றும் சில பகுதிகளிலும் உள்ள ஆரம்பத் தமிழ் பாடசாலைகளுக்கே சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். பெரும்பான்மையாக இந்நிலை அங்கு நிலவுகிறது. இது அர்த்தமற்றதும், தேவையற்றதும், கல்வி முறைக்கு முரணுனதும் ஆகும். அதுமட்டுமன்றி இரண்டாவதுமொழியாகிய ஆங்கிலத்துக்கு உலை வைப்பதுமாகும்.

## எதற்காக நாம் சிங்களம் படிப்பது!

சிங்கள மொழியை தாழ்த்தும் நோக்கம் எனக்கு கிடையாது. ஆனுல் சிங்களம் ஒரு பெரிய இலக்கிய வரலாறு உடையதோ அல்லது காப்பிய, காவிய சிறப்பம்சங்களைக்கொண்ட மொழியோ அல்ல. ஆகையால் மொழியின் சிறப்புக்காக நாம் அதை படிக்க விரும்பவில்லை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். தென்னிலங்கையிலுள்ள வர்த்தகத்துக்காகவும் இதை நாம விசேடமாகப் படிக்கத் தேவையில்லை.

பல ஆண்டுகளாக எமது வர்த்தகர்கள் தென்னிலங்கையில் வர்த்தகம் செய்து வருகின்றனர். தமக்குத் தேவையான சிங்களத்தை அவர்கள் படித்திருக்கின்றனர். ஆகையால் இது ஒரு புதிய தேவை அல்ல.

நாம் சிங்களம் படிப்பதனுல் இந்நாட்டில் ஒற்றுமையை வளர்க்க முடியும் என்று ஒருசில அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

தமிழ்ப்பகுதியில் 1956ம் ஆண்டுக்கு முன் சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் மற்றும் சில பாடசாலைகளிலும் சிங்களம் கற்பிக்கப்பட்டதைத் அவர்கள் நினைவூட்டுகின்றனர்.

தொடர்ந்தும் சிங்களம் இப்பாடசாலைகளில் கற்பிப்பதால் இன ஒற்றுமையை வளர்க்க முடியாதா என்று அவர்கள் கேட்கின்றனர்.

ஆனுல் அவர்கள் ஒன்றை மறந்து விட்டார்கள்.

1956ம் ஆண்டுக்கு முன் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் வேறும் பல சிங்களக் கல்லூரிகளிலும் தமிழ் படிப்பிக்கப்பட்டதையும் அவர்கள் மறந்து விட்டனர்.

எமது தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்க வேண்டும் என்று கேட்கின்ற அவர்களுக்கு ஆனந்தா கல்லூரியிலும் மற்றும் சிங்களக் கல்லூரிகளிலும் தமிழை மீண்டும் படிப்பிக்க வேண்டும் என்று கேட்பதற்கு தைரியமில்லை.

நாம் மட்டும் சிங்களத்தை படித்து எப்படி இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்?

நாம் மட்டும் சிங்களம் படித்தால் சிங்கள மக்கள் எம்மை சிங்களத்தில் ஆள்வதற்கு வழி வகுத்தவர்களாவோம் அவர்கள் கூறுகின்ற இன ஒற்றுமை உண்மையில் வளர வேண்டுமானுல் சிங்களவர்களையும்தமிழ்படிக்கத் தூண்ட வேண்டும்.

## உத்தியோகமே ஒரே நோக்கம்.

(5) ஆகவே தமிழர்கள் சிலா சிங்களம்படிக்கவிரும்புவதன் ஒரே நோக்கம் அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைக்கும் என்ற நப்பாசைதான் என்பது வெளிப்படையான உண்மை. சிங்களம் படித்து விட்டால் உத்தியோகம் கிடைத்துவிடும் என்பது பகற்கனவு.

சிங்களத்தில் படித்து சிங்களப் பரீட்சைகளில் சித்தியெய்திவிட்டு பல்லாயிரக் கணக்கான சிங்கள வாலிபர்களே இன்றுவேலையில்லாமல் அலைகிருர்கள் — அவர்களே ஆயுதப் புரட்சியிலும் இறங்கினுர்கள். அதேபோல் எத்தனையோ தமிழ் வாலிபர்களும் சிங்களம் படித்துவிட்டும் வேலை கிடைக்காமல் இன்று இருப்பதை நான் அறிவேன்!

அரசாங்க உத்தியோகத்தின் மீது ஆசைகொண்டு, சிங்களம் படிக்க விரும்பி, சிங்கள ஆசிரியர்களை எமது பாடசாலைகளுக்கு அனுப்ப இடம் தருவோமானுல் இப்போதுள்ளதைவிட வேலை வாய்ப்புக்கு கஷ்டம் இன்னும் அதிகரிக்கவே செய்யலாம்!

1958ம் ஆண்டின் தமிழ் உபயோகச் சட்டத்தில் இருந்து நமக்கு ஒரு உண்மை புலனுகின்றது.

இந்தச் சட்டத்தின் மூன்ருவது சரத்து கூறுவது என்னவென்ருல், தமிழில் கல்வி பயின்ற ஒருவர் தமிழிலேயே அரசாங்க சேவைப் பரீட்சைகளை எடுக்கலாம். அப்படிதமிழ்மூலம் அரசாங்க சேவைக்கு தெரிவுசெய்யப்படுபவருக்கு தேவையானசிங்களஅறிவுஇருக்கவேண்டும்; அல்லது குறிக்கப்பட்ட காலத்துக்குள் அந்த சிங்கள அறிவை பெற வேண்டும். ஆனுல் தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் படிப்பிப்பதற்கு போதிய வசதிகள் ஏற்படுத்தப் பட்டது என்று அரசாங்கம் கருதினுல், அரசாங்க சேவைக்கு தெரிவு செய்யப்படுகின்ற நேரத்திலேயே போதிய சிங்கள அறிவு இருக்கவேண்டும். இதனுல் சிங்களவர்களுக்கு அவர்களுடைய தாய் மொழியான சிங்களமொழியிலுள்ள அறிவையும் தமிழர்களுடைய சிங்கள அறிவையும் அரசாங்கம் சமமாகக் கணிக்கவும் இடமுண்டு. இந்தச் சரத்தில் நாம் ஒன்றைக் கவனிக்கவேண்டும். அது என்னவென்ருல் தமிழ் மாணவர்கள் போதியளவு சிங்கள அறிவு பெற்றுவிட்டார்களா என்பதல்ல கேள்வி — அரசாங்கம் சிங்களம் படிப்பிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்தியிருக்கின்றதா என்பதே கேள்வி

ஆகையினுல் சிங்கள ஆசிரியர்களை எங்கள் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதனுல் அரசாங்கத்தில் வேலை தேடுகின்றவர்களுக்குக்கூட எதிர் காலத்தில் பல சிக்கல்கள் ஏற்படும்.

எனவே நான் முதற் சொல்லியதுபோல — அரசாங்கம் தமிழைப் தமிழ் பிள்ளைகளின் கட்டாய போதனு மொழியாக்கவும், இரண்டாவது கட்டாய மொழியாக ஆங்கிலத்தைப் புகட்டவும் சட்டங்கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் முதலில்! அதன் பின்னர், சிங்களத்தை மூன்ருவது மொழியாகப் படிப்பிப்பதானுல், அதை எந்த வகுப்பிலிருந்து படிப்பிப்பது என்பதையும் பகிரங்கமாக, தெளிவாக, திட்டவட்டமாக கூறட்டும். அதன் பின்னரே சிங்களம் படிப்பது பற்றி நாம் ஆலோசிக்க முடியும். அப்படியின்றிதமிழ்கட்டாய போதனுமொழி ஆங்கிலம் இரண்டாவது கட்டாய மொழி போன்றவற்றுக்கு சட்ட பாதுகாப்பின்றி சிங்களம் படிக்க தமிழர்கள் முனைந்தால், அதுதற்கொலை செய்வதாகத்தான் இருக்கும் என்று கூறி விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.'

இக்கல்லூரியில் (சுன்னுகம் ஸ்கந்தவரோதயாகல்லூரி) சிங்களம் கற்பிக்க (3) மூவர் ஆதரவு தெரிவித்தனர்.

56 பேர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சிங்களம் கற்பிக்க எதிர்ப்புத் தெரிவித்து மேற்படி பெற்றோர்—ஆசிரியர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியது.

---

## ஒவ்வொரு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வைப்போம்! வெறிபிடித்தவர்களிடமிருந்து விடுதலை பெறுவதற்காக இரத்தம் சிந்தி உயிர்விடவும் நாங்கள் தயார்!

ஒவ்வொருவராகச் சிறைக் குட் பூட்டினுலும் ஓயாமற் தொடரும் தமிழர் படை! உங்கள் சிறைக் கூடங்கள் அனைத்தையும் நிரப்பிவிட ஆயிரமாயிரம் இளைஞர்கள் காத்துக்கிடக்கிருர்கள்! அவர்களைத் தடுத்து நல்வழியைக் காட்டிநிற்கும் தானைத் தலைவன் தந்தை செல்வாவையும் கேலி செய்கிருர் அமைச்சர்! இவையெல்லாம் நன்மைக்கல்ல என்பதை அழுத்தம் திருத்தமாகக்கூற வேண்டியுள்ளது. என்ருே ஒருநாள் தலைவனின் ஆணை பிறக்கும்! அன்று உருவாகும் அமைதிப் போரில் ஆயிரமாயிரம் இளஞ் சிங்கங்கள் உயிரை இழக்கவும் தயாராகக் காத்திருக்கிருர்கள் என்பதை அமைச்சரும், அவரின் அடிவருடிகளும் உணர்ந்து திருந்த வேண்டும்! இன்றேல் பின்னர் வருந்த வேண்டிவரும்.

---

## உதவி அமைச்சர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டுடன் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது மூன்று இளைஞர்கள் பொலிஸ் அதிகாரிகளின் மிருகத்தனமாக தாக்குதலுக்கு உள்ளாயினர். செல்வன்கள்:- பூட்மேரி யோசவ், யோகிங்கம், தயாளன் ஆகிய மூவருமே மேற்படி தாக்குதலுக்கு உட்பட்டு சங்கானை பொலிஸ் நிலையத்தில் காவலிடப்பட்டனர்.

இது குறித்து பண்டத்தரிப்பு த. கூ. வாலிப முன்னணியினர் அதிவிரைவாகச் செயல்பட்டு திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், தர்மலிங்கம் (பு.க.) முன்னாள் செனட்டர் நடராசா முதலியோரின் உதவியுடன் மேற்படி 3 இளைஞர்களையும் அன்றிரவே விடுதலையாக்கினர்.

---

## செல்வா..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலையின் இயக்குனர் சபைத்தலைவராக தந்தை செல்வாவும், செயலாளராக அ. அமிர்தலிங்கமும், உறுப்பினர்களாக உடுவில் பா. உ. வி. தர்மலிங்கம், மு. சிவசிதம்பரம், புதுவை ஆனந்தன் ஆகியோரும் செயல்படுகின்றனர்.

1961ம் ஆண்டு சத்தியாக்கிரகப்போராட்ட காலத்தில் தபால் சட்டத்தை மீறி தனித்தமிழ் முத்திரை வெளியிடப்பட்டது தெரிந்ததே கல்விச் சட்டத்தை மீறி புதிய பாடசாலை தொடங்கப்பட்டதும் அதே போன்ற ஒரு சட்ட மறுப்பே என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

---

## 'ஆத்மஜோதி' வெள்ளிவிழா

கடந்த கால் நூற்ருண்டு காலம் சயயப்பணி ஆற்றி வரும் 'ஆத்மஜோதி' ஒரு வெள்ளி விழாகொண்டாடுகிறது. இம்மாதம் 7ம் திகதி சனிக்கிழமை மாலை 6மணிக்கு இவ்விழா வெள்ளவத்தை — இராமகிருஷ்ண மிஷன் கலாச்சார மண்டபத்தில் நடைபெறுகிறது.

இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி பிரேமாத்மானந்த மகராஜ் விழாவிற்குத் தலைமை தாங்குகிருர்.

---

## தெல்லிப்பழை கிராமசபைத்தலைவர் வாழ்த்து

தமிழர் தந்தை செல்வாவின் 75வது பிறந்த நாளன்று தெல்லிப்பழை கிராமசபைத்தலைவர் திரு. மு. சிதம்பரநாதன், உபதலைவர் திரு. லாசறஸ் உட்பட கிராமசபையின் ஆறு அங்கத்தவர்களும், செல்வாவின் இல்லம் சென்று தங்கள் வாழ்த்துக்களை பெரியவருக்கு தெரிவித்துக் கொண்டனர்.

---

## கவிஞர்நாதன் இரங்கற்கூட்டம்

அண்மையில் இயற்கையடைந்த மதுரகவி எஸ். எஸ். நாதன் அவர்களின் நினைவாக இரங்கற்கூட்டம் ஒன்று 7-4-73 சனிக்கிழமை பாண்டிருப்பு அண்ணு மன்றத்தினரால் நற்பிட்டி முனை அ. த. க. பாடசாலை மண்டபத்தில் திரு. சி. கா. தெய்வநாயகம் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் திரு. செ. இராசதுரை பா. உ., ஆ. வேல்முருகு நீலாவணன் உட்பட பலர் பேசுவர். கவிஞர் பாண்டியூரன் தலைமையில் கவியரங்கும் இடம் பெறுகிறது.

---


## நல்ல முடிவு

''அப்போதைக்கப்போது ஆகவேண்டியதை முறையாகச் செய்தால் நல்ல முடிவுக் அது கொண்டு சேர்க்கும்.''

—ஞானி.

மில்க் வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குமாரசூரியருக்கு கிடைத்த 'மூளி' வரவேற்பு!

## விருந்து வைபவத்தைப் பகிஷ்கரித்தார் ஆரையம்பதி கிராம சபைத் தலைவர்

## போட்ட பந்தல் பிரித்தெறியப்பட்டது!

சமீபத்தில் மட்டக்களப்புக்கு எழுந்தருளினார் அல்லவா தபால் அமைச்சர்? அவருடைய நிகழ்ச்சி நிரலில் மட்டக்களப்புத் தொகுதியின் மிகப்பெரிய கிராமமான ஆரையம்பதியும் சேர்க்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு — கல்முனை பிரதான வீதியில் ஆரையம்பதிக் கிராமத்தின் எல்லை ஆரம்பமாகும் இடத்தில் அமைச்சரை வரவேற்க ஒரு 'முகப்பு'ப்பந்தல் போட்டுத்தரும்படி மன்ருடினர் மட்டக்களப்பின் துரோகச் சின்னமான இரண்டாவது பிரதிநிதி திரு. பி. ஆர். செல்வநாயகம்.

'காலடிக்கு வந்துவிட்டானே போனுல் போகட்டும்'' என்ற பாங்கில் முசைப்போடு ஒரு சில பந்தல் என்ற பெயரில் ஒரு 'தட்டி'யைக் கட்டினர். அமைச்சர் வரவேண்டிய நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. தன்மானிகளான ஆரையம்பதி மக்கள் என்ன நினைத்துக்கொண்டார்களோ தெரியவில்லை. ஆவேசம் கொண்டவர்கள் போல் அமைக்கப்பட்டிருந்த 'தட்டி'யைப் பிய்த்து எறிந்தனர்! அமைச்சர் வந்தார்; சிதைந்து உருக்குலைந்து கிடந்த 'பந்தலை'ப் பார்த்தார்; ஒரு பெருமூச்சுவிட்டார் தம் 'ரூட்டை' மாற்றிக்கொண்டார்.

அன்றிரவு ஆரையம்பதி மகாவித்தியாலயத்தில் அமைச்சருக்கு ஒரு விருந்து. அதில் கலந்து விருந்து வைபவத்தைச் சிறப்பிக்குமாறு ஆரையம்பதியின் முதல் மகன், கிராமசபைத்தலைவருக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டது. குலத்துக்குக் கொள்ளிவைக்கும் அந்த விழாவில் நான் கலந்து கொள்ள மாட்டேன்' என்று அழைப்பை மறுத்துவிட்டார் கிராமசபைத் தலைவர் திரு. பா. சிவசுப்பிரமணியம்.

கடைசியில் கிராமசபைத் தலைவர் இல்லாமல் 'மூளி'யாய் அமைச்சருக்கு அமோக வரவேற்பு' அளிக்கப்பட்டது!

குமார சூரியருக்கு தரப்பட்டவரவேற்பில் கலந்து கொள்ள தலைவர் மறுத்த காரணத்துக்காக ஆரையம்பதி கிராமசபை விரைவில் கலைக்கப்படலாம் என்றும் பேசப்படுகிறது. இந்தமுயற்சியில் துரோகப் பிரதிநிதி ஓடித்திரிகிருராம்!

## பூட்டு!

—'தாமரைத் தீவான்'

வருகிறது வாய்ப்பூட்டு! வரவே செய்யும்!
வந்திட்டால் வாய் என்ன? கைக்கும் பூட்டே!
தருகிறது கவலை அது தரவே செய்யும்!
தந்தாலும் தாங்கித்தான் தீரவேண்டும்!
பெருகிறது எதிர் எண்ணம் பெருகியென்ன?
பேசுவதார்? எழுதுவதார்? பெரிய பாவம்!
ஒரு தடவை செய்பணியின் பயனையெல்லாம்
ஒவ்வொன்ருய்ப்பட்டேதான் தீரவேண்டும்!

வாழ்வென்ருல் உரிமையொடு வாழ்தல்! அஃதே
வளமான நல்வாழ்வு! அவ்வாழ்வின்றேல்
தாழ்வேதான்! எவையெல்லாம் அள்ளி அள்ளித்
தந்தாலும் விட்டாலும் தலையுள்ளோர்க்கு
வீழ்வேதான்! வெளியினிலே இருந்தபோதும்
வெஞ்சிறைதான்! இருளேதான் விடிந்தபோதும்!
பாழ்ஆகும் பொன்கூண்டும் பசுங்கிளிக்கு,
பால்பழமும் வேம்பாகும்! பறக்கொணுதே?

உரிமையெனில் உள்ளத்தால் உள்ளல்! வாயால்
உரையாற்றல்! கைக்கோலால் தீட்டல்! போன்ற
அரிய பல கருத்தெல்லாம் அறிவுக்கேற்ப
அவரவர்கள் வெளியிட்டால் அதனுல் நல்ல
பெரிய பல உண்மையெலாம் பிறக்கும்! பொல்லாப்
பேதமைகள் நீங்கிவிடும்! பெருமாசொன்றும்
தரியாது மனதினிலே! உரிமைக்கேதும்
தடையிட்டால் எண்ணங்கள் தழைக்குமாமோ?

கருத்ததனைக் கருத்தனுல் வெல்வதன்றி
கருத்திற்குத் தடைபோடல் கடைசிமட்டும்
பொருத்தமாய்த் தெரியவில்லை! பொருந்தாவிட்டால்
புதுமை பிறந்திடுதற்கு வழியே இல்லை!
வருத்தந்தான்—வருத்தத்தை வளரவிட்டால்
வளர்ந்து வெளியாகாமல் உள்ளத்திற்குள்
பெருத்துவிடுமாயினது பேராபத்தாம்!
பிறகுரிமை நொடிதனிலும் பிறக்கலாகும்?

## பறவைகளுக்குக்கூட பாதுகாப்பு அங்கு! பைந்தமிழினத்துக்கு அது இல்லை இங்கு!!

250 வகைப் பறவைகள் சோவியத் பிரதேசத்தில் கூடுகட்டுகின்றனவென்றும் இந்தப் பறவைகள் மாரிகாலத்தில் ஜப்பானுக்குப் பறந்து செல்கின்றனவென்றும் அதனுல் இப்பறவைகளின் பாதுகாப்பை முன்னிட்டு ஜப்பானுடன் சோவியத அரசாங்கம் ஒப்பந்தம் செய்யவுள்ளதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

ஆம், பறவைகளைப் பாதுகாப்பதற்குக்கூட சோவியத் யூனியன் ஒப்பந்தம் செய்கிறது.

ஆனுல் ஈழத்திலோ வரலாற்றுப் பெருமைமிக்க இரண்டாவது பெரிய தேசிய இனமான தமிழ் மக்களுக்கு அரசியல் சட்டத்தில் பாதுகாப்பில்லை. உரிமைகள் இல்லை.

பறவைகளுக்குக்கூட பாதுகாப்பு அங்கு—பைந்தமிழ் இனத்துக்கு பாதுகாப்பில்லை இங்கு!

தமிழினத்தின் உரிமைகளை—தமிழ் மக்களின் தனித்துவத்தை பாதுகாக்காத—பாதுகாக்காததுமட்டுமல்ல, சிறுமைப்படுத்தி அழித்தொழிக்கும் புதிய அரசியல் சட்டத்தைதான், சோவியத் யூனியனைப் பின்பற்றுவதாக கூறும் ஈழத்துக் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிருர்கள்!

அரசாங்கத்தின் சார்பில் புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்தும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு அரசியல் சட்டப் பாதுகாப்பு கோருகின்ற தந்தை செல்வாவை எதிர்த்தும் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் போட்டியிடவும் போகிருர்கள்!

சோவியத் நாடே! உன் பெயர் சொல்லி ஏமாற்றி—உன் கொள்கைக்கு குழி தோண்டும் இந்த ஈனர்களைப் பார்! முடியுமானுல் இவர்களைத் திருத்து!!

எஸ். ஆர். எம்.

## 4 தமிழ் இளைஞர்களின் பதவிக்கு 'அரோகரா''

### சிங்களமொழி ஆணையாளரின் கெடுபிடி

தமிழ்த் தட்டெழுத்தாளர்களுக்கான எண்ணற்ற பதவிகள் நாடெங்கிலுமுள்ள திணைக்களங்களில் வெற்றிடங்களாக இருக்கின்ற அதே வேளையில் ஏற்கனவே தட்டெழுத்தாளர்கள் நியமிக்கப்பட்ட பல திணைக்களங்களில் அப்பதவிகளை இல்லாமற் செய்வதில் சில சிங்களத் திணைக்களத் தலைவர்கள் எதேச்சாதிகார நடவடிக்கைகளைச் சோசலிசத்தின் பெயரால் எடுத்து வருவதாகத் தெரிகிறது.

சிங்களத்திற் கடமையாற்றத் தவறும் தமிழ்த் தட்டெழுத்தாளர்களை உடனுக்குடன் இடமாற்றம் செய்து வருவதில் அரசகரும மொழித் திணைக்களத்துச் சிங்கள ஆணையாளர் கடைப்பிடித்துவரும் வெறிச்செயல் பற்றி ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தோம்.

நான்கு தமிழ்த் தட்டெழுத்தாளர்களுக்கான பதவிகள் அரசகரும மொழித் திணைக்களத்தில் வெற்றிடமாக இருக்கையில் அவற்றை நிரப்புவதில் எவ்வித கவனத்தையும் ஆணையாளரோ அன்றேல் தமிழ் உதவி ஆணையாளர் திரு. மாணிக்க நடராஜா அவர்களோ எடுக்காதிருப்பது குறித்துத் தமிழ்த் தட்டெழுத்தாளர் மன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞரும் பெண்களும் தமிழ்த் தட்டெழுத்தில் ஜி. சி. ஈ. பரீட்சையில் சித்தியடைந்துவிட்டு தொழில்காண் பணியகங்களில் தம்மைப் பதிவுசெய்துவிட்டுப் பல வருடங்களாக வேலை இன்றிக் காத்திருக்கும் அதே வேளையில், தமிழ் மொழிச் சட்டம் செயற்படுத்தப்படுவதைத் தடை செய்யும் தனது சிங்கள வெறிச்செயலின் ஒரு பகுதியாகவே வெற்றிடமான பதவிக்கு எவரையும் நியமிக்காதிருக்கும் செயலையும் திரு. பீட்டர் அபயசேகரா மேற்கொள்வதாகத் தமிழ்த் தட்டெழுத்தாளர் ஒன்றியம் அபிப்பிராயப்படுகிறது.

## சேவை காலப்பணம் இ.தொ. கழகம் பெற்றுக்கொடுத்தது

திரு. கே. கறுப்பையா, திருமதி. கறுப்பையா ஆகியோர் கந்தப்பளையைச் சேர்ந்த ரில்லாமுல்லா தோட்டத்தில் சேவை செய்தமைக்காக, அவர்களின் சேவைக்கால பணத்தை மேற்படி நிர்வாகம் அவர்கள் ரில்லாமுல்லா தோட்டத்தை விட்டு நீக்கி பல வருடங்கள் சென்று விட்டன. ஆகையால் அவர்களுக்குரிய சேவைக்காலப் பணம் கொடுக்க இயலாது என்று நிராகரித்ததைத் தொடர்ந்து இ. தொ. கழக இராகலை மாவட்ட பிரதிநிதி திரு. வி. ஆறுமுகநாதன் அவர்கள் நுவரெலியா தொழில் அதிபருடன் மேற்கொண்ட நடவடிக்கையால் மேற்கண்டவர்களுக்கு ரூபா 125-48 சதத்தை உடனடியாக செலுத்துமாறு திணைக்களம் கட்டளை பிறப்பித்து இந்தத் தொகையை சம்பந்தப்பட்டவர்களுக்கு நிர்வாகம் நேரடியாக வழங்கியது.

## மலையகத்திலே.......

## 30 கோரிக்கைகள் ஏற்கப்பட்டன!

மகாஉ.எவா தோட்டத்தில் நடைபெற்றவேலைநிறுத்தத்தில் இ. தொ. கழகம் மேற்கொண்ட 30 கோரிக்கைகள், 20. 3. 73ல் நுவரெலியா தொழில் கந்தோரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நிர்வாகத்தினரால் ஒத்துக்கொள்ளப்பட்டது. முக்கியமாக தொடர்ந்து ஆறுமாதங்களில் பிடிக்கப்பட்ட தெண்டப்பணம் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு திருப்பி கொடுக்கப்பட்டுள்ளது. (இந்த வேலை நிறுத்தத்தில்,) இனிமேல் தொழிலாளர்கள் நசுக்கப்படமாட்டார்கள் என்று மேற்படி நிர்வாகம் அறிவித்தது.

இந்த பேச்சுவார்த்தையில் இ. தொ. கழக துணைச் [illegible]ளாளர் திரு: எஸ். கெங்க[illegible]ரட்ணம், மாவட்ட பிரதிநிதி திரு. வி. ஆறுமுகநாதன் இ. தொ. கா, பிரதிநிதி, ஸ்ரீ லங்கா தோட்ட தொழிலாளர் சங்க பிரதிநிதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேச்சுவார்த்தையின் வெற்றியை குறிக்குமுகமாக 22. 3. 73ல், மாகாஉவா தோட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாவட்டப்பிரதிநிதி திரு. வி. ஆறுமுகநாதன் பேசியதாவது.

வாழ்க்கைச்செலவு ரொக்கட் வேகத்தில் உயர்ந்துவிட்ட இன்று, நாளாந்த உழைப்பிலேயே நீங்கள் தெண்டம், அரைப்பேர், என்றெல்லாம் கடந்த சில காலமாக கஷ்டப்பட்டீர்கள். ஆனுல் வேலைநிறுத்தம் என்ற ஆயுதத்தை கட்சி பேதங்கள் இன்றி கைப்பற்றி [illegible] [illegible]மை சிறப்புக்குரியது. இந்த வேலை நிறுத்தத்தில் கட்சி பேதம் இன்றி தொழிலாளர்கள் ஒத்துழைத்தமைக்காக நான் கழக சார்பாக ஏனைய சகோதர தொழிற்சங்க தோழர்களுக்கு நன்றி கூறுகின்றேன். இதேபோல் இந்த நாட்டின் முதுகெலும்பாய் திகழும் தொழிலாளர்கள் நியாயமான மாதச்சம்பளப் போராட்டம் ஒன்றினை நடத்தி வெற்றிபெற சங்கற்பம் பூணவேண்டும் இதுவே இன்று தோட்டத் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் மனதில் இருத்த வேண்டியதாகும். மற்றும் இதர தொழிற்சங்கபிரமுகர்களும் உரையாற்றினர்.

## தமிழில் நடைபெற்ற இராப்போசன விருந்து

யாழ்-கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தினரின் 9வது வருடாந்த இராப்போசன விருந்து 17-3-73 அன்று மேற்படி கல்லூரியில் நடைபெற்றது.

இந்த இராப்போசன விருந்தின்போது நிகழ்ச்சிகள் யாவற்றையும் அழகு தமிழில் சிறப்பாக நடாத்தி தமிழன்னையை கௌரவித்தது பாராட்டுக்குரியது. அவர்களது நிகழ்ச்சி நிரல் அட்டைகள்கூட தனித் தமிழில் அச்சிடப்பட்டு இருந்தன! விருந்தினர்களாக அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் தமது உரைகளை தமிழிலேயே ஆற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் (4)

ஒவ்வொரு மனித உள்ளமும் தம்மிடமுள்ள திறமையைப் பிறருக்கு வெளிப்படுத்திக் காட்டவே பெரும்பாலும் விரும்புகின்றது. காலம் சிலருக்குச் சாதகமாகவும் சிலருக்குப் பாதகமாகவும் முடிந்து விடுகின்றது. கால ஓட்டத்தில் கிடைத்த வெற்றியைச்சிலர் தமது சுயமுயற்சி, என்றும், தம்மால் ஆகாதது ஒன்றுமே இருக்க முடியாது என்றும் வீம்புபேசுவதுமுண்டு. பாதிக்கப்பட்டவர்கள் பழியைக் காலத்தின் மீது திருப்பி விட்டு மனத்திருப்தி அடைகின்றனர். ஜீவராசிகளைக் கருவிகளாக வைத்து அவற்றை ஆட்டிப்படைக்கும் சூத்திரதாரி ஒருவனைப் பலர் மறந்துவிடுகின்றனர். அதே நிலையில் தான் ராதாலட்சுமியும் இருந்தாள்.

அந்தஸ்து, அறிவு, திறமை யாவும் அவளிடம் இருந்தது போல அகம்பாவமும் குடிகொண்டிருந்தது. வீணையை மீட்டுவதில் அவளுக்கிருந்த திறமையை கல்லூரி மேடையில் பலரறியக் காட்ட வேண்டும் என்ற ஓர் அகம்பாவம் அவளிடம் தோற்றிக் கொண்டது. அதைச் செயலாக்க பொருளியல் விரிவுரையாளர் திருமதி. பத்மாசனியை வீட்டிற்கு அழைத்திருந்தாள். அவள் ராதாலட்சுமியின் இரண்டாவது அக்காள் சீதாலட்சுமியுடன் பல்கலைக்கழகத்தில் படித்தவள். அவள் தன் சினேகிதிகளுடன் ராதாலட்சுமி வீட்டுக்கு வந்திருந்தாள். அவர்களுடைய குரல் கேட்டு வெளியே வந்த தந்தையும் மகளும் அவர்களை வரவேற்றுக் கூடத்திற்கு அழைத்து வந்தனர்.

"அப்பா! இவர்களை உங்களுக்குத் தெரியுமா?" என்று பத்மாசனியைச்சுட்டிக்காட்டிக் கேட்டாள் ராதாலட்சுமி.

"தெரியுமாவா? நம்ம சீதாவுடன் பல தடவைகள் இங்கு வந்த போது பார்த்திருக்கின்றேனே" என்று சோமசுந்தரம் கூறிவிட்டு, "என்ன பத்மா குழந்தைகள் ஏதாவது உண்டா?" என்று அவளைக் கேட்டார்.

"இல்லே. இனிமேல்தான்" என்று அவளும் பல நாட்கள் பழக்கப்பட்டவள் போன்று, கூறி வைத்தாள்.

"ஏன் ராதா வீணை வாசித்துக் கொண்டிருந்தாயா?" என்று ராதா பக்கமாகப் பார்வையைச் செலுத்தினாள் பத்மாசனி.

சந்தர்ப்பத்தினை உண்டாக்குவதற்குரிய காலம் ராதாலட்சுமிக்குச் சாதகமாகவே அமைந்திருந்தது. அதை அவள் பெருந்தன்மையுடனேயே பயன் படுத்திக் கொள்ளவே முயன்றாள்.

"ஏன் ரீச்சர் உங்களுக்கு வீணை மீட்ட வருமா?" என்றாள் ராதாலட்சுமி.

"அக்கா சொல்லவில்லையா? ஏதோ சில நாட்கள். அப்புறம் முடியாது போய் விட்டது. நன்கு கச்சேரி செய்யக் கூடிய திறமை உனக்கு இருக்குமோராதா"?

"ஏதோ ஓரளவுக் குவாசிப்பேன்."

"பரவாயில்லே. கொஞ்சம் மீட்டேன் ராதா."

ராதாலட்சுமி வீணையை மீட்ட ஆரம்பித்தாள். அவளது விரல்கள் தந்தியில் தவழ்ந்தன. சுநாதவிநோதினி ராகம் கூடியிருந்தவர்களை ஈர்ந்திழுத்தது. வாசுதேவாச்சாரியின் "தேவாதி தேவா ஸ்ரீவாசுதேவா" கீர்த்தனை சுநாதவிநோதினியில் கலந்து சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல அவர்களைக் கிறங்க அடித்து விட்டது.

"ராதா! அருமையாக, மிகலலிதமாக மீட்டுகின்றாய் இந்த இசையை விட்டில் நாலுபேர் மத்தியில் நீவாசித்துப் பிரயோசனமில்லே. உங்கப்பா அனுமதித்தால் கல்லூரி நாடகத்தன்று, ஒரு மணிநேரம் உனது கச்சேரிக்கும் ஒழுங்கு செய்யலாம்". என்றாள் திருமதி. பத்மாசனி.

ராதாலட்சுமி தந்தையைத் திரும்பிப்பார்த்தாள். அவரும் சாதாரண மனிதர்களில் ஒருவர்தானே. தன் மகளுக்கு அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதை ஏன் விலக்க வேண்டும். பணத்துக்காக அவர் வித்தை கற்பிக்கவில்லையாயினும் புகழை விரும்பாதவரா?

'உங்களுக்கு விருப்பமென்றால் தடையேதுமில்லே. ஏன் லட்சுமி உனக்கு விருப்பமா?' என்றார்.

'நல்ல விடயத்தில் எனக்கு விருப்பமில்லையாப்பா? தவிர எங்கள் கல்லூரியில் வாசிப்பதற்கு எந்தப் பெரிய வித்துவானும் பணமில்லாமல் ஓடி வருவார்களே' என்றவள் பத்மாசனியின் பக்கம் திரும்பி, 'உங்கள் விருப்பம் போலச்செய்யுங்கள் ரீச்சர்' என்றாள்.

'ராதா! மிஸ்டர் பத்மநாதனுக்குக் கர்நாடக சங்கீதம் என்றாலே உயிர். நீ பாரேன் அவர் கேள்விப்பட்டதும் நேரே ஓடிவருவார்.' என்று உற்சாகமூட்டினாள்.

ராதாலட்சுமியின் உள்ளத்தில் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. அவள் உள்ளத்திலுள்ளே கரைபுரளும் ஆனந்த வெள்ளத்தில் வாசுதேவனுடைய சிரித்த முகம்! 'நீயும் ஏதோ ஒரு வகையில் இந்தக் கடமையில் ஈடுபடுகின்றாயே ராதா' என்று அவன் கூறுவது போன்ற இனிய கற்பனை. அவள் அந்த இனிய நினைவுகளிலேயே மிதந்துகொண்டிருந்தாள்.

இரண்டு நாட்களுக்குப் பின்பு கல்லூரியில் விளம்பரப் பலகையில் அந்தச் செய்தியைத் தாங்கிய விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. நாடக ஒத்திகையில் மும்முரமாக ஈடுபட்டிருந்ததினால் வாசு அதனைப்பார்க்கவில்லை. ஆனால் ஒத்திகை முடிந்து மாலை ஆறுமணியளவில் வீட்டிற்குப் புறப்பட்டவேளை, 'மிஸ்டர் வாசு! வன்மினிற் பிளீஸ்' என்று சுகுணாதேவி அவனிடம் வந்தாள்.

'ஹலோ என்ன அர்ஜன்ட்டா' என்றான்.

'நோ...நோ உங்களுக்குத் தெரியுமோ என்னவோ நான் அறியேன். நோட்டீஸ் போட் பார்த்தீர்களா?'

'இல்லையே.'

'மிஸ் ராதாலட்சுமி நாடகத்திலன்று வீணைக் கச்சேரி செய்கிறாளாம்.'

'ராதாவா?' அட எனக்குச் சொல்லவில்லையே.'

'ஏன் உங்களைக் கேட்டுத்தான் செய்யணுமா?'

'அப்படியில்லே. ஆனால் ராதா எதுவானாலும் எனக்குச் சொல்வார்களே. ஆனால் இந்த விடயத்தை ஏனோ மறைத்துவிட்டாள்.'

'அது மிஸிஸ் பத்மாசனியின் ஏற்பாடு.' என்று தனக்குத் தெரிந்த விடயங்களைக் கூறினாள்.

'அப்படியா? நல்லது தானே நான் வாரேன்' என்று புறப்பட்டான் வாசுதேவன்.

அவன் மனநிலையை ஆராயும் பொருட்டே அப்படி ஒரு முறைப்பாட்டை அவள் ஆரம்பித்தாளாகிலும், வாசுவிடமிருந்து எதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவன் மனதில் எத்தகைய உணர்ச்சிகள் தேங்கி நிற்கின்றனவென்று அவளால் உணரவோ, அறியவோ முடியவில்லை. அவன் ராதாவை விரும்புகின்றானா? இல்லையா? என்பதைக்கூடத் தெரிந்துகொள்ள முடியவில்லை. கடைசி வரையில் இப்படியே ஏமாற்றமடைய வேண்டியதுதானா? சுகுணா எதற்குமே என்றும் கவலை கொள்ளாதவள். ஆனால் வாசுவின் நினைவு அவளைத் தினசரி கவலைக்கடலில் தள்ளிக்கொண்டிருந்தது.

மனிதர்களாகப் பிறந்து வாழ்வதோ சொற்பகாலம். அதிலும் மரணம் ஜீவராசிகளின் அழையா விருந்தாளி.

தொடர்கதை

அதற்கிடையில் கவலைக்கும் துன்பத்துக்கும் ஆட்பட்டு ஏன் மனிதன் மடியவேண்டும்? இருக்கும்வரை இயன்றளவு இன்பத்தின் இசையுடன் வாழவேண்டும் என்று நினைப்பவள் சுகுணா.

பெரும்பாலான மனிதர்கள் இப்படித்தான் நினைக்கின்றார்கள். வாழ்கின்றார்கள். அதற்கிடையில் துன்பப் புயல் இடையிடையே வீச ஆரம்பித்துவிடுகின்றதே அர்த்தமற்ற கட்டுப்பாடுகளைத் தகர்த்து விட்டுப் புதுமைப் பெண்ணாக வாழவே அவள் விரும்பினாள். அவள் நினைத்தவைகளை அடைந்தவள். சாதனைகள் புரிந்தவள். ஆனால் வாசுவிடம் அவள் வித்தை பலிக்கவில்லையே! அதுதான் அவள் துன்பத்திற்கேகாரணமாகிவிட்டது.

நாடக ஒத்திகை நடந்து கொண்டிருக்கும் வேளையில் அவனுடைய கம்பீரமான உருவத்தினைப் பார்த்து அவள் உள்ளம் தள்வசமிழந்து தவிக்கும். ஏற்றுள்ள பாத்திரத்தின் குணச்சித்திரமாகவே மாறிவிடும் அவன் நிச்சயம் பலரது பாராட்டுக்குரியவனாகி விடுவான் என்று நம்பினாள் சுகுணா.

ஒரு மனிதனுடைய வெளித்தோற்றத்தினைக் கொண்டு அவன் நல்லவனா கெட்டவனா என்று கணித்துவிட முடியாது. உள்ளே தேனினுமினிய சுவைகளைக் கொண்டு விளங்குகின்ற பலாப்பழத்தின் வெளிப்புறம் முள்ளுடையதாக ... கொண்டு ... வெளித்தோற்றத்துக்குக் கண்டிப்பு நிறைந்தவனாகவும், முரட்டுத்தன்மையுள்ளவனாகவும் காட்சியளிக்கின்றான் என்பதைப் புரிந்து கொண்டாள் சுகுணா.

நரசிம்ம பல்லவனாய் வீரக்களைபொருந்த அவன் பேசும் வசனங்களையும், பொங்கும் இன்பக் காதல் என்றால் கனிந்து குழைந்து உருகும் அவன் இயல்பையும் எண்ணி எண்ணிக்களிப்படைந்தாள். ஒரு நாள் ஒரு பொழுதாகிலும் அவனுடைய அன்பு அரவணைப்பில் முகம் புதைத்து இன்புற வேண்டும் என்ற முடிவோடு விடுதிக்குத் திரும்பினாள்.

கல்லூரி நாடகதினத்தன்று வீணைக்கச்சேரிக்கு நிட்சயம் செய்யப்பட்ட பின்பு தினமும் வீட்டு முன் ஹோலில் வீணையும் கையுமாகவே இருப்பாள் ராதாலட்சுமி. வீணையென்றால் அவளுக்கு ஒரே பைத்தியம் என்று மற்றவர்கள் நினைக்கும்படியாய் ஒரேயடியாக வீணைமீட்டலில் ஈடுபட்டிருந்தாள். புதிய சினிமாப்பாடல் ஒன்றுக்கு'ஸ்வரம்' அமைத்து வீணையில் மீட்ட முனைந்த சமயம் வாசுவின் உருவம் அவள் இதய அரங்கில் இன்ப மயக்கத்தை உண்டாக்கி விடவே முதலில் இருவர்க்கிடையிலும் நடைபெற்ற உரையாடலும்; அவன் கதைக்கும் பொழுது இருந்த உற்சாகமும் மகிழ்வும் அவள் நினைவில் மிதந்தன.

'ஏன் மிஸ்ராதா! எனக்கு நீங்கள் வீணை வாசிப்பீர்கள் என்று தெரியாதே' என்றான் வாசு.

'தெரிந்திருந்தால் என்ன செய்வீர்களாம்?'

'நாடகத்தில் ஒரு காட்சியில் உங்களையும் இடம் பெறச் செய்திருப்பேன். இல்லையெனில் குந்தவையின் பாகத்தை உங்களுக்குத் தரும்படி கேட்டிருப்பேன்.'

'அப்படி எதுவும் வேண்டாம். இதுவே போதும். அப்புறம் சுகுணா கோவிப்பாளே' என்றாள்.

அவள் அப்படிக் கூறியது வாசுதேவனின் மனத்தைப் புண்படுத்திவிட்டது. அவன் சிரித்த முகத்தில், உணர்வுகள் மாற்றமடைந்து எதுவும் பேசாமல் நின்றான்.

'ஏன் வாசு ஓ...... ஐ ஆம் சொறி. மிஸ்டர் வாசு! என்னுடன் கோபமா? என்றாள்.

'பரவாயில்லே. என்னை நீங்கள் வாசு என்றே அழைக்கலாம். ஆனால் தேவையில்லாத வார்த்தைகளைக் கூறுதிருந்தால்போதும் நேற்றும் ஏதோ கதையில் சுகுணா கோபிக்கமாட்டாளா என்றீர்கள். அதே வசனத்தினை நான் கேட்கவிரும்பவில்லை. மிஸ் ராதா!'

'ஏன் என்னையும் நீங்கள் ராதா என்று அழைக்கலாம் இல்லையா?'

'அழைப்பதில் தவறில்லை ராதா ஆனால்......' அவன் முகத்தினைப் பார்க்கவே அஞ்சினாள் ராதாலட்சுமி.

'வாசு! நான் தெரியாமல் கூறிவிட்டேன். மறந்தும் கூட இனிமேல் இப்படிக் கூற மாட்டேன். மன்னித்து விடுங்கள்.'

'மன்னிப்பது சுலபம் ராதா, நீங்கள் ஏன் இப்படிக் கூறினீர்கள் என்பது தான் எனக்குப் புரியவில்லே.'

'வேடிக்கைக்காகச் சொன்னேன் வாசு. இன்னும் என்னுடன் கோபமா?'

'நான் கோபிப்பதாயின் உங்களோடு கதைக்கவே மாட்டேன். நான் யாருடனும் கோபிக்கமாட்டேன். ஆனால் கோபித்தால் என் சீவியத்தில் அவர்கள் முகத்தில் கூட விழிக்கமாட்டேன். இதுதான் என்குணம்.'

'ஐ லைக் இற் வெரிமச். வாசு! நீங்கள் எனக்கு ஆரம்பத்தில் உதவிசெய்தீர்கள் என்பதற்காக உங்களோடு பழகினேன் என்று எண்ணுகிறீர்கள். இங்கு படிக்கும் பலரிடம் இல்லாத பல குணங்கள் உங்களிடம் இருப்பதினால்தான் உங்களோடு பழகினேன். பழகுகின்றேன். என்னையும் உங்களையும் சேர்த்து எத்தனையோ கதைகளை என் பிரண்ட்ஸ் எல்லாம் கதைப்பார்கள். நான் கோபிப்பதில்லே.' என்று அவள் கூறிய சமயம் பஸ்வண்டியும் வந்து சேர்ந்தது.

அவளுடைய நினைவுத்திரை விலகிய சமயம் எதிரே ஆத்திரம் பொங்க ரமேஷ் நின்றிருப்பதை உணர்ந்தாள் ராதாலட்சுமி.




---

## தமிழன் சிங்களத்தில் எழுதினாலும் அதோகதிதான்!

அண்மையில் தனது நிறைமாதக்கர்ப்பிணியாகிய மனைவியைப் பிரசவத்திற்காகத் தனது ஊராகிய கரவெட்டிக்கு அழைத்துச் செல்வதற்காக ஒரு தமிழ்த் தட்டெழுத்தாளர் சிங்களத்தில் புகையிரத ஆணைச்சீட்டிற்கான விண்ணப்பப் படிவத்தை நிரப்பி விண்ணப்பித்திருந்தார்.

இரண்டாம் வகுப்புப் பெட்டியில் மனைவியை நெருக்கடி இன்றி அழைத்துச் செல்லலாமென ஆணைச்சீட்டை எதிர்பார்த்திருந்த அலுவலர் குறித்த நாள் கடந்தும் ஆணைச்சீட்டு கிடைக்காததால் ஊர்செல்லும் பயணத்தைப் பிற்போட்டு விட்டு சிங்களவராகிய உதவி ஆணையாளரிடம் முறையிட்டார்.

கவனிப்பதாகக் கூறிய ஆறுதலுரையின் பேரில் மூன்று நாட்கள் மேலும் பொறுத்திருந்தாலும் ஆணைச்சீட்டு கிடைக்காத தமிழ் தட்டெழுத்தாளர் மூன்றாம் வகுப்பு உறங்கலிருக்கையும் கிடைக்கப் பெறாது நெருக்கடிக்கு மத்தியில் மூன்றாம் வகுப்பில் பயணஞ்செய்து ஊர் செல்ல வேண்டிய துர்ப்பாக்கியத்துக்குள்ளானார்.

தமிழ்த் தட்டெழுத்தாளர்கள் சிங்களத்தில் கடமை ஆற்றவேண்டுமென்னும் விதி நீக்கப்பட்டிருப்பினும், சிங்களத்தில் எழுதிக் கொடுத்த விண்ணப்பத்திற்கு நேர்ந்த கதியைப் பற்றிச் சக சிங்களத் தட்டெழுத்தாளர்களும் கொதிப்படைந்திருப்பதாகத்தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று கைதிகளான காட்சியளிக்கின்றனர்
சிவாஜி
நாகேஷ்
முத்துராமன்

# மூன்று தெய்வங்கள்

ஈஸ்ட்மன் கலர்

ஆன கதை

**செல்லமகால்**

**இம்பீரியல்**
(மட்டுநகர்)

விரைவில்

**வின்சர்**
(யாழ்நகர்)

சுப்பையா,
சிவகுமார்,
V. S. ராகவன்,
M. R. R. வாசு,
மூர்த்தி,
சந்திரகலா,
கௌசல்யா,

டைரக்ஷன்
x—x—x
தாதாமிராசி

திரை கதை வசனம் கோபு

2வது வாரம் கெபிட்டி
விலாசினி நெல்சன்
(தெகிவளை) (திருமலை)

குடும்ப கௌரவத்தை காப்பாற்ற முயற்சித்தாள் ஓர் பேதைப்பெண் அதில் அவள் வெற்றி பெற்றாளா?

ஜெய்சங்கர், நாகேஷ்,
வாணிஸ்ரீ, ஆனந்தன்,
—நடித்த—

# அத்தைமகள்

படத்தின் முடிவை யாரிடமும் கூறிவிடாதீர்கள்



தமிழ் நாட்டில் வெள்ளி விழா கொண்டாடி
ஈழத்திலும் வெற்றிமுரசு கொட்டுகிறது!
**3வது மாதம்!**

கெப்பிட்டல் வெம்பிளி வெலிங்டன்
(கொழும்பு) (கண்டி) (யாழ்ப்பாணம்)

சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ,
—நடித்த—

# வசந்தமாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

2வது வாரமாக காண்பிக்கப்படுகிறது

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) லிடோ (யாழ்ப்பாணம்)

ஜெமினி, பத்மினி, சிவகுமார், மனோகர், சுந்தரராஜன், சோ, நடித்த **தேனோடம்**

6—வது மகத்தான வாரம்

"தேவனே என்னைப் பாருங்கள்"

சென்ட்ரல் ராணி ஜோதி
(மருதானை) (யாழ் நகர்) (திருகோணமலை)

சிவாஜிகணேசன், சாரதா,
விஜயநிர்மலா, மனோரமா, சுந்தரராஜன்
வீ. கே. ராமசாமி, நடிக்கும்



# ஞான ஒளி

டைரக்ஷன்:—
பி. மாதவன் பீ. ஏ.

சென்னையில் 100 நாட்களுக்குமேல் ஓடிய மகத்தான திரையோவியம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ இலக்கத்தில் 1973ம் வருடம் ஏப்ரல் மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.